خيركم من تعلم القرآن وعلمه

"குர்ஆனைக் கற்று, பிறருக்கும் கற்பிப்பவரே உங்களில் சிறந்தவர் ஆவார்"

பகுதி 1

# ஒவ்வொரு அத்தியாயத்தின் சுருக்கமான அறிமுகம்

# HAR JUZ KA MUKHTASAR TA'RUF

அத்தியாயம் 01-05


ஆசிரியர்

டாக்டர் அர்ஷத் பஷீர் உமரி மதனி

DR. ARSHAD BASHIR UMARI MADANI

Hafiz, Alim, Fazil (Madina University, K.S.A), M.B.A. ;

Founder & Director of AskIslamPedia.com


كِتٰبٌ اَنْزَلْنٰهُ اِلَيْكَ مُبٰرَكٌ لِّيَدَّبَّرُوْۤا اٰيٰتِهٖ وَلِيَتَذَكَّرَ اُولُوا الْاَلْبَابِ
(நபியே! குர் ஆனாகிய இது, அதன் நன்மைகள் பன்மடங்காக்கப்பட்டதாக இருக்க) பாக்கியமிக்க வேதமாகும், இதனுடைய வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், (இதனை கொண்டு) அறிவுடையோர் நல்லுபதேசம் பெறுவதற்காகவும் நாம் இதை உம்மீது இறக்கிவைத்தோம்.
(அல்குர்ஆன் : 38:29)

**Har Juz Ka Muqtasar Taroof) (Har Juz Ka Muqtasar Taroof)**

**(ஒவ்வொரு அத்தியாயத்திற்கும்  சுருக்கமான அறிமுகம்)**

**Prepared by:**

**ڈاکٹرارشد بشیر عمری مدنی**

**Shaikh Dr. Arshad Basheer Umari Madani**

Hafiz, Aalim, Faazil (Madina University, KSA),

MBA, PhD from Switzerland.

Founder & Director of AskIslamPedia.com

Chairman: Ocean The ABM School, Hyd.

www.askislampedia.com | www.abmqurannotes.com | www.askmadani.com

+91 92906 21633 (WhatsApp only)

**மொழி பெயர்த்தவர்கள்**:

தன்விருல் இஸ்லாம் உமரி

முஹம்மத் ஜுரேத்

முஹம்மத் தல்ஹா

{சூரா அல்-ஃபதிஹா}

•அகிலத்தைப் படைத்து பராமரித்துக் கொண்டிருக்கும் இறைவனுக்கே அனைத்து புகழும்‹அவன் மிகவும் இரக்கமுடையவனாகவும் கருணையாளனாகவும் இருக்கின்றான்,மேலும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவரைப் பின்பற்றி வாழ்ந்த சத்திய சஹாபாக்கள் மீதும், அவருடைய குடும்பத்தினர் மீதும் அல்லாஹ்வுடைய அருள் உண்டாவதாக.

•திருமறைக் குரான் அல்லாஹ்வினால் அருளப்பட்ட உண்மையான வேதம் என்பதை நாம் அறிவோம்,இந்த வேதம் மனித குலத்திற்க நேர் வழியாக இருக்கின்றது ஆகையால் இந்த குர்ஆனை முறைப்படி பின்பற்ற வேண்டும் மற்றும் இந்த குர்ஆனுடைய சரியான புரிதலை கொள்வது ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும்,யார் குர்ஆனுடைய கல்வியை முறைப்படியாக கற்றுக் கொண்டார்களோ அவர்களும் வெற்றியாளராக மாறுவார்கள் மற்றும் யார் இந்த கல்வியை போதிப்பதிலும் கற்பதிலும் தன்னுடைய வாழ்க்கையை ஈடுபடுத்திக் கொண்டு இரவு பகல் பாராமல் உழைத்த மார்க் அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நற்செய்தி உண்டு,அனைவரின் உழைப்பினால் நம்முடைய சிறிய முயற்சியாக

(ہر پارہ/مختصر تعارف

உங்களுக்காக வழங்கப்படுகிறது.

(. سلسلہ تفسیر قران العظیم திருக்குர்ஆனின் தொடர் கட்டுரைகளை யாரேனும் சுருக்கமாகவும் அதற்கான விளக்க உரை பல மாதங்களுக்கு முன்னதாகவே தொடங்கிவிட்டன எளிதாகவும் புரிந்து கொள்ள விரும்பினால், அவர்களுக்கான திருக்குர்ஆன் விளக்கத் தொடர் உள்ளது என்பதே இந்நூலின் நோக்கமாகும் ஒரு பொதுவான மனிதருக்கும் எந்த சிரமமும் ஏற்படாத வகையில், எளிதான தமிழ் மொழி நடையில் நான் உருவாக்கியுள்ளேன் மற்றும் 30 ஜூஸுகளிலும் காணப்படும் அனைத்து தலைப்புகளின் சுருக்கமான கண்ணோட்டம் ஒரு சாதாரண மனிதனின் இதயத்திலும் மனதிலும் நன்றாக பதியும் வகையில், தலைப்புத் தொடரை எளிதான முறையில் வழங்க முயற்சித்துள்ளோம்.

எடுத்துக்காட்டாக, முதல் பத்தில் காணப்படும் அனைத்து தலைப்புகளிலும், தனித்தனி தலைப்புகளின் கீழ் முழு அலகையும் குறிப்புகளாகப் பிரித்துள்ளேன்,ஒவ்வொரு அலகுக்கும் ஒரு சிறிய மற்றும் முழுமையான அறிமுகத்தை முன்வைக்க முயற்சி செய்து உள்ளேன்.

திருமறை குர்ஆன் உடைய

விளக்கத்தை ஆடியோ மற்றும் புத்தக வடிவில் வழங்குவோம் இன்ஷா அல்லாஹ் அதன் பிறகு இதுவும் தொடர்ச்சியாக வழங்கப்படும் அல்ஹம்துலில்லாஹ் இதற்கான விளக்க உரை வேலையை பல மாதங்களுக்கு முன்பே ஆரம்பித்து விட்டோம் இன்ஷா அல்லா இது விரைவில் முடிக்க அல்லாஹ் நமக்கு சக்தியை தருவானாக மற்றும் இந்த விளக்க உரையின் கல்வியானது எனக்காகவும் இதை கற்றுக் கொள்ளும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் உதவியாளர்களுக்கும் பெரும் வெகுமதியை வழங்கவும், இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைய எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

.(சூரா அல் பாத்திஹா)

•சில உரையாசிரியர்கள் இந்த சூரா ஆனது  மக்கி மற்றும் பிற உரையாசிரியர்கள் இந்த சூரா மதனி என்று கூறுகிறார்கள் மற்றும் சிலர் இந்த சூரா இரண்டு முறை அருளப்பட்டது என்று கூறுகிறார்கள் முஷா்ஃப் மதனியின் கூற்றுப்படி, இந்த சூரா மக்கி ஆகும்.

1.சூர பாத்தியாவில் முன் அருளப்பட்ட அனைத்து வேதங்களுடைய விளக்கமும் இதில் சொல்லப்பட்டுள்ளது. --مجمع فتاوى

2.இந்த காரணத்திற்காக, சில அறிஞர்கள் இந்த சூராவின் பெயரை உம்முல்-கிதாப் மற்றும் உம்முல்-குர்ஆன் என்று வழங்கியுள்ளனர்.

•குர்ஆனின் போதனைகள் (1)நம்பிக்கை (2)வணக்க வழிபாடு (3)வாழ்க்கை முறை(4)நல்லவர்கள் மற்றும் கெட்டவர்களின் குணாதியசங்கல் மற்றும் அவர்களின் முடிவுரைகளில் ஆகியவை அடங்கும், இவை அனைத்தும் சூரா ஃபாத்திஹாவில் விளக்கப்பட்டுள்ளன,இமாம் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அவர்களின் சூர பாத்தியாவின் தப்ஸீரின் கூற்றின்படி:முழு குர்ஆனும் இந்த நான்கு விஷயங்களை விளக்குகிறது...

1.நம்பிக்கை(اَلْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ . الرَّحْمَنِ الرَّحِيمِ . مَالِكِ يَوْمِ

الدين

2.வணக்க வழிபாடு((إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

3. வாழ்க்கை முறை((اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ

4. நேர் வழிக்காண பாடம்,பிரசங்கம்,நினைவூட்டல்

5. (صِرَاطَ الَّذِينَ أَنعَمتَ

عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ)

6. •சூரத்துல் பாத்திஹாவின் பின்னணியில் ஆறு கேள்விகள் மற்றும் அவற்றின் பதில்கள்:

கேள்வி எண்.1 (நான் யார்?

நான் அல்லாஹ்வின் அடியான்،நான் அல்லாஹ்வுக்கு மட்டுமே சேவை செய்ய வேண்டும்((إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

கேள்வி எண் 2 (என்னைப் படைத்தது யார்?

அல்லாஹ் என்னை படைத்தான்

(الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ . الرَّحْمَنِ الرَّحِيمِ)

கேள்வி எண் 3(நான் இறந்த பிறகு நான் எங்கு) செல்வேன? நான் இறந்த பிறகு எனக்கு என்ன நடக்கும்?((مَٰلِكِ يَوْمِ الدِّينِ

கேள்வி எண் 4(நான் என்ன செய்ய வேண்டும்?நான் யாரை வணங்க வேண்டும்?மற்றும் எப்படி வழிபட வேண்டும்?

இப்னு கையும் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்:முழு இஸ்லாமும் இந்த இரண்டு கேள்விகளின் பதிலில் உள்ளது.

முழு வாழ்க்கையும் வணக்கமாக உள்ளது மற்றும் இரண்டு கேள்விகளின் பதிலில் அடங்கியுள்ளது.

1.நீங்கள் யாரை வணங்குவீர்கள்?பதில்: அல்லாஹ்வையே வணங்குவோம்...

2.இந்த ஒரு அல்லாஹ்வை வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் எப்படி வணங்குவீர்கள்?பதில்: அல்லாஹ்வுடைய தூதர் காட்டித் தந்த வழியின் படி நடப்பேன்.

(إيَّاكَ نَعْبُدُ و إيَّاكَ نَسْتَعينُ إهدِنا الصِّراطَ المُستَقيمَ صِراطَ الذينَ أنْعَمتَ عَلَيهِمْ غَيرِ المَغْضوب عَلَيهم و لا الضَّالينْ)

கேள்வி எண் 5)நான் எதை செய்யக்கூடாது?

(غَيرِ المَغْضوب عَلَيهِم و لا الضَّالينْ)

கேள்வி எண் 6)அல்லாஹ்வை திருப்திப்படுத்த என்ன வழி?

அல்லாஹ்வுடைய தூதரையும் அவரைப் பின்பற்றி வாழ்ந்த சஹாபாக்களையும் முறைப்படி பின்பற்றுவதன் மூலம் அல்லாஹ்வுடைய அன்பைப் பெற முடியும்..

(إهدِنا الصِّراطَ المُستَقيمَ صِراطَ الذينَ أنْعَمتَ عَلَيهِمْ)

•இந்த சூரா ஒவ்வொரு தொழுகையிலும் ஓதப்படுகின்றது(புகாரி:756,முஸ்லிம்:394)

•இந்த சூராவிற்கு பல பெயர்கள் உண்டு:

•("سورة أم القرآن، سورة الحمد، وفاتحة الكتاب، والواقية، والشافية، والسبع المثاني")

விளக்க உரை.

•சூரா ஃபாத்திஹாவில்

إهدِنا الصِّراطَ المُستَقيمَ))

குறிப்பிட்டுள்ளது இது சூரா பகராவின் தொடக்கத்தில்

( هُدًى لِّلْمُتَّقِينَ)குறிப்பிடப்பட்டுள்ளது,சூரா ஃபாத்திஹாவில் எந்த நேர்வழிக்கான கேள்வி எழுப்பப்பட்டதோ அதை சூர பகராவில் குர்ஆன் வடிவில் கொடுக்கப்படுவதை குறிக்கப்பட்டுள்ளது அதாவது செய்யப்பட்ட பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7.சூரா பகராவில் வழிகாட்டுதல் பற்றிய குறிப்பும் உள்ளது

{فَإِنْ آمَنُوا بِمِثْلِ مَا آمَنتُم بِهِ فَقَدِ اهْتَدَوا ۖ وَّإِن تَوَلَّوْا فَإِنَّمَا هُمْ فِي شِقَاقٍ ۖ فَسَيَكْفِيكَهُمُ اللَّهُ ۚ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ} அல்-பகரா137,இஸ்லாத்தைப் புரிந்துகொள்வதற்கு நபிகள் நாயகம் மற்றும் தோழர்களைப் பற்றிய புரிதல் அவசியம் என்பதை இது காட்டுகிறது.

•சூரா அல்-ஃபாத்திஹாவின் முடிவில், மக்தூப் மற்றும் ஜாலின் வார்த்தைகள் பின்வரும் சூராக்களுடன் நெருக்கமாக தொடர்பு கொண்டுள்ளது.

(صِرَاطَ الَّذِينَ أَنعَمتَ

عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ)

"மஃஜூப்"உதாரணமாக, சூர பகரா மற்றும் சூரா நிஸாவில் யூதர்கள் பற்றி அதிகமாக கூறப்பட்டுள்ளது.

"ஜாலின்" உதாரணமாக, நசாராக்கல் பற்றி பெரும்பாலும் சூரா ஆல-இம்ரான் மற்றும் சூர மாயிதாவில் அதிகமாக கூறப்பட்டுள்ளது.

•சூரா ஃபாத்திஹாவின் தொடக்கத்தில் ஏன் கொண்டு வரப்பட்டது?Preamble(அரசியலமைப்பு) இதனுடைய சட்டத்தை விட சூரா ஃபாத்திஹாவின் சட்டமானது மிக வலிமையானது.

•வரலாற்றில் சூரா ஃபாத்தியாவிற்காக அறிஞர்கள் கடுமையாக உழைத்துள்ளார்கள் அதிகமாக கவனமும் செலுத்தி உள்ளார்கள்,உதாரணமாக, அபுல் கலாம் ஆசாத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இந்த சூராவின் விளக்கத்தில் (உம்முல் கிதாப்) என்ற புத்தகத்தை தொகுத்துள்ளார்-இதேபோல், ஷேக் அப்துல் ரசாக் அல்-இபாத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்""من هدايات سورة الفاتحةஎன்ற புத்தகத்தை எழுதினார்،அவ்வாறே, இப்னு கயீம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ""مدارج السالكينஒரு முழு தொகுதி ஒதுக்கினார்,அதேப் போல் இமாம் சுயுதி ரஹிமஹுல்லாஹ் சூரா ஃபாத்திஹாவிற்கு" براعة الاستهلال"என்ற ஒரு சிறந்த தலைப்பைக் கொடுத்து சூரா ஃபாத்திஹா உம்முல் கிதாப் என்பதை நிரூபித்தார்.

•குர்ஆனின் தொடக்கத்தைக் கவனித்துப் பாருங்கள், அரேபியர்கள்,குதிரைகள், அரண்மனைகள் மற்றும் அன்பானவர்களைப் புகழ்வதில் அரேபியர்கள் சோர்வடையவில்லை-

•ஆனாலும் இவைகள் எல்லாம் இருந்தபோதிலும், அவர்களால் படைப்பாளன் யார் என்று படைப்பிலிருந்து அடையாளம் காணுவதில் வெற்றி அடைய முடியவில்லை-

•அல்குர்ஆன் ஆரம்பத்திலேயே அதனுடைய உண்மைத் தன்மையை விளக்கி விட்டது அனைத்து உயிரினங்களையும் பார்த்த பிறகு( الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ)ஏன் சொல்லவில்லை, அதாவது குர்ஆனின் ஆரம்பத்திலேயே கூறப்பட்டுள்ளது படைப்பினங்கள் மீது கவனம் செலுத்தி படைத்தவனை உண்மை என்று அறிவதே இயற்கையின் கோரிக்கை ஆகும்.

•சிறந்த பண்பை விவரித்து மக்களின் கவனத்தை ஈர்க்கும் கவிதைகள் கஅபாவில் தொங்கவிடுதல்.

•இது அவசியம் கிடையாது கவிதை எந்த நோக்கத்திற்காக புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கின்றதோ அது அனைவருடைய மனதிலும் பதிய வேண்டும், ஆனால் குர்ஆனுடைய ஆரம்ப முதல் முடிவு வரை சொல்லப்பட்ட அனைத்தும் மனிதனுடைய இயல்பும் அவனுக்கான கோரிக்கையும் ஆகும்.

•சூரா அல்-இக்லாஸில், அல்லாஹ் தன்னை நபி (ஸல்) அவர்கள் மூலம் (குல்) என்று சொல்லி அறிமுகப்படுத்தினான்,ஆனால் சூரா அல்-ஃபாத்திஹாவில் தன்னுடைய அறிமுகத்தை நேரடியாக செய்துள்ளான் படைப்பினங்கள் அல்லாஹ்வை நேரடியாக தெரிந்து கொள்ளும் விதமாக தன்னை அறிமுகப்படுத்தியிருக்கின்றான்-ஆரம்பத்தில் இயற்கையின் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

•அரேபியர்களைப் போல குதிரைகள் மற்றும் பிற பொருட்களின் குணங்களை ஒப்புக்கொண்ட மக்களுக்கு, இந்த குணங்களைப் படைத்த அல்லாஹ் ஒருவன் மட்டுமே உங்கள் புகழுக்கும் வணக்கத்திற்கும் தகுதியானவன் என்று ஒரு செய்தி வழங்கப்படுகிறது அவர்களிடம் தவ்ஹீதே-ருபுபியத்தை கொண்டு தவ்ஹீதே உலுஹியத்தின் பக்கம் அழைக்கப்பட்டனர்-

•நியூட்டன் அவர்களைப் பின்பற்றுபவர்கள் அதே தவறைச் செய்தார்கள், படைப்பைக் கருத்தில் கொண்டு படைப்பாளரின் அறிவை அவர்களால் அடைய முடியவில்லை.

•விழுகின்ற ஆப்பிளைக் கண்டு (Apple) அதனை ஈர்ப்பு விசை(Gravity) என்று விளங்கிக் கொண்டனர், ஆனால் ஆப்பிளையும் ஈர்ப்பு விசையும் உருவாக்கியவரை மறந்துவிட்டார், அவ்வாறே குதிரைகளின் பண்புகளில் மதிமயங்கிய புலவர்கள் குதிரைகளின் பண்புகளை நினைவுகூர்ந்து, அதைப் படைத்த ஓர்-இறைவனை தூய (தவ்ஹீதை) மறந்துவிட்டார்கள்.

உயிரினங்களைப் பற்றிச் சிந்திப்பதன் மூலம், உண்மையான படைப்பாளனை தெரிந்துகொள்ள முடியும், இந்த செயல்முறை முழுமையான கண்டுபிடிப்பு(Complete Discovery) என்று அழைக்கப்படுகிறது. இன்றைய விஞ்ஞானம் முழுமையற்ற கண்டுபிடிப்பையும்(Incomplete Discovery), உயிரினங்களின் ஆராய்ச்சியை மட்டுமே செய்து கொண்டிருக்கும் வேளையில் அந்த படைப்பாளரின் ஆராய்ச்சியை செய்ய மறந்து விட்டனர்.

• தஃவா மற்றும் சீர்திருத்த அனுபவங்களில் ஒன்று, அயத் அல்-குர்சி முன்வைக்கப்படுவது போல, தவாத் துறையில், இந்த சூராவை மிகவும் எளிமையான மற்றும் பயனுள்ள முறையில் வழங்க முடியும்.

•கடந்த பத்து வருடங்களில், தொலைக்காட்சியில் எபிசோடுகள் மூலம் லட்சக்கணக்கான மக்களுக்கு இறைவனின் செய்தியை எடுத்துரைக்கும் வாய்ப்பை அல்லாஹ் எனக்கு அளித்துள்ளான். அல்ஹம்துலில்லாஹ்!

•அல்லாஹ்வின் புகழும் விளக்கமும் (1-3)

•அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்கு தகுதியானவன் அவனிடமே பிரார்த்தனை செய்ய வேண்டும். (4)

•மூமின்கள் பிரார்த்தனைகளின் மூலம் நேரான பாதையை அவர்கள் பின்பற்ற விரும்புகிறார்கள் மேலும் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கும், தவறான பாதையில் செல்வதற்கும் அவர்கள் அஞ்சுகிறார்கள்.(7-5)

•••••••••••••••••••••••••••••••••••••••

{சூரா அல்-பகரா}

“அருளப்பட்ட இடம்” – மதீனா

“சில நோக்கங்கள்”

Few Objectives

•இந்த சூராவின் இலக்கு “இஸ்லாமிய ஷரியாவும் அதன் அமலாக்கமும்”ஆகும் பூமியில் உள்ளவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவருடைய போதனைகளைப் பின்பற்ற தேவையான அனைத்து விதிகளும் இந்த சூராவில் விவரிக்கப்பட்டுள்ளன.

•இஸ்லாத்தின் இலக்கை நம்பி அதை பின்பற்றுபவர்கள் வெற்றி பெறுவார்கள், மேலும் இலக்கை மாற்றியவர்கள் வெற்றியை அடைய மாட்டார்கள்.

•பனீ இஸ்ரேலின் குறிப்பிட்ட கூட்டத்தினர் பூமியில் மார்க்க ரீதியாக தகுதியற்றவர்களாக திகழ்ந்தார்கள், அதே சமயம் இப்ராஹிம் அலைஹிவஸ்சலாம் அவர்களை பின்பற்றியவர்கள் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்தனர்.

வசனம் 30, தஃப்சிர் இப்னு கதீர் பக் 216, தஃப்சீர் அல்-மனார் இக்தாதா அல்-சரத் அல்-முஸ்தகீம் இப்னு தைமியா, அவசியம் படியுங்கள்...

•இந்த பூமியில் அல்லாஹ்வை வணங்குவது என்பது (குர்ஆனிய அர்த்தத்தில் ஆகும், அல்லாஹ்வை வணங்குவது என்பது பொது அர்த்தத்தில் அல்ல).

•ஆரம்பத்தில், நபி ஆதாமுக்கும் வானவர்களுக்கும் இடையே எழுப்பப்பட்ட கேள்விகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

•இந்த சூராவில் வணக்க வழிபாடு மற்றும் சமூகம்,குடும்பம்,செல்வாக்கு,நற்குணம் போன்ற விஷயங்கள் உள்ளடங்கியுள்ளது.

•நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்ததிலிருந்து அவர் இறக்கும் வரை பல தவணைகளில் இந்த சூரா இறங்கியது.

•அல்லாஹ்வுடைய தூதர் காட்டித் தந்த வழியைப் பின்பற்றுவதன் மூலம் மற்றும் சஹாபாக்களுடைய வழியில் அமல் செய்வதன் மூலம் அல்லாஹ் பூமியில் ஆதிக்கம் வழங்குவான் இல்லையெனில் இல்லை.

•இந்த சூராவின் ஒரு பகுதியில், வரலாற்றின் தகுதியான மற்றும் தகுதியற்ற நபர்கள் பற்றி கூறப்பட்டுள்ளன மற்றும் மற்ற பகுதியில்

எந்தப் போதனைகளின் அடிப்படையில் ஒரு மனிதன் தகுதி பெறுகிறான் என்று கூறப்பட்டுள்ளது.

•நேரான பாதையில் சென்றவர்கள் போல் (ஆதாம்,இப்ராஹிம் மற்றும் யாகூப் மற்றும் அவர்களின் சந்ததியினர்) மற்றும் நேர்வழியில் செல்லாதவர்கள் (பனீ இஸ்ரவேலர்கள்) அவர்களுடைய வரலாறும் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

•நேர்வழியில் உறுதியாக இருப்பதற்கு அகீதா மற்றும் அல்லாஹ்வால் காட்டப்பட்ட நேரான வழியில் உறுதியாக இருப்பது அவசியமாகும்.

•மனித குலத்தின் அனைத்து பிரச்சனைகளுக்கும் இஸ்லாமிய மார்க்கமே தீர்வாகும்.

•சூரா பகராவின் ஒரு பகுதி உம்மத் தா ஃவத்துடன் தொடர்புடையது, மற்றொரு பகுதி உம்மத்துடைய இஜாபத்துடன் தொடர்புடையது.

•இந்த சூரா இரண்டு பெரிய வசனங்களுடன் முடிவடைகிறது, இந்த இரண்டு வசனங்கள் மேஃராஜ் இரவில் உம்மத்திற்கு கருணை மற்றும் பரிசாக வழங்கப்பட்ட இரண்டு வசனங்கள் ஆகும், மேலும் இந்த இரண்டு வசனங்களும் சிம்மாசனத்தின் பொக்கிஷம் ஆகும்.

(ஸஹீஹ் அல்-ஜமாயி:1060)

••“அலிஃப் லாம் மீம்” என்பது புனித குர்ஆனின் முதல் பகுதி என்று அழைக்கப்படுகின்றது மார்க்க அறிஞர்கள் முதல் பகுதியின் தலைப்புகளை ஐந்து அலகுகளாக பிரித்துள்ளார்கள் அவை பின்வருமாறு:

••அலகுகள் மூலம் பகுதி எண் 1 “அலிஃப் லாம் மிம்” வசனங்கள் மற்றும் கட்டுரைகளை அலகுகள் மூலம் பிரித்தல்.

•அலகு எண்: 1

•1-39 மனிதகுலத்தின் பிளவு பற்றி குறிப்பிடுதல் (இறையச்சம்,இறை மறுப்பாளர், நயவஞ்சகர்கள்)

•அலகு எண்: 2

40-48 பனீ இஸ்ரவேலர்களுக்கு எச்சரிக்கை மற்றும் கண்டனம் பற்றிய குறிப்பு,

•பனீ இஸ்ரேலின் கீழ்ப்படியாமையின் குறிப்புகள் மற்றும் வெகுமதிகள்,அற்புதங்கள் கீழ்ப்படியாமையால் அவர்கள் எப்படி அவமானப்படுத்தப்பட்டார்கள் என்பனப் பற்றியக் குறிப்பு.

•அலகு எண்: 3

49-74 பனீ இஸ்ராயீலின் கீழ்ப்படியாமை மற்றும் தகுதியிழப்புக்கான காரணங்கள் மற்றும் குற்றங்கள் பற்றிய தொடர் குறிப்புகள், அல்லாஹ்வின் உதவியின் பல்வேறு அறிகுறிகளைக் கண்ட பிறகும், ஆலோசனைகள் பெற்ற பிறகும் கல்நெஞ்சமாக மாறி இருந்தார்கள்.

த∴ப்சீர் அல்-மனார்: 1/107

•அலகு எண்:4

•75-123 அல்லாஹ்வுடைய தூதர் காலத்தில் பனீ

இஸ்ரவேலர்களிடம் காணப்பட்ட கீழ்ப்படியாமைகள் பற்றிய குறிப்பு.

•அலகு எண்: 5

•124-141 நபி இப்ராஹிம் மற்றும் நபி முஹம்மத்(ஸல்) அவர்களுடைய அழைப்புப் பணியின் குறிப்புகள்.

•அலகு எண்:6

•மனிதக் குலத்தின் பிரிவு பற்றிய குறிப்பு:

திருக்குர்ஆனின் முதல் அலகில் அனைத்து மனித குலத்தையும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1.இறையச்சக்காரர்கள்

2.இறை மறுப்பாளர்கள்

3.நயவஞ்சகர்கள்

•சூரா அல்-பகரா 1 முதல் 39 வரையிலான வசனங்களைக் கொண்டுள்ளது மற்றும் இந்த அலகில் நபித்துவத்தின் வாக்குறுதி குறிப்பிடப்பட்டுள்ளது,எடுத்துக்காட்டாக:

( ۚ هُدًى لِّلْمُتَّقِينَ ۝ )

•இந்நூலில் (அல்லாஹ்வின் வேதம் என்பதில்) எந்தச் சந்தேகமும் இல்லை, ஆனால் இது இறையச்சமுடையவர்களுக்கு வழிகாட்டியாகும்.

•மேற்கண்ட வசனத்தில் மூன்று குழுக்களாக குறிப்பிடப்பட்டுள்ளன:

1."முதல் குழு இறையச்சமுடையவர்கள்":

•முதல் கூட்டத்தில் உள்ளவர்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்ட பிறகு அதில் உறுதியாக இருந்து நேரான பாதையில் சென்றவர்கள் மேலும் இந்த பாதையில் உறுதியாக நிலைத்து இருந்தவர்கள்.

2.இரண்டாவது குழு "கா.ஃபிரின்" :

•இறை மறுப்பாளர்கள்; முஹம்மது நபி (ஸல்) அவர்களை வெளிப்படையாக மறுத்தவர்கள் மற்றும் அல்லாஹ்வின் நபியின் நேரான பாதையின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிய வெளிப்படையாக மறுத்ததும் அல்லாமல்,

கேலி செய்தார்கள்.

3.மூன்றாவது நயவஞ்சகர்களின் குழு:

•வெளிப்புறமாக அவர்கள் முஸ்லீம்களைப் போல தோற்றமளித்தாலும் மறைமுகமாக நயவஞ்சகர்கள் கா.ஃபிர்கள் மற்றும் முஷ்ரிக்களிடம் சார்ந்து இருந்தவர்கள்,

நயவஞ்சகர் மற்றும் இறை மறுப்பாளர் பண்புக்கூறுகள் மற்றும் நயவஞ்சகர்களுடைய இரண்டு எடுத்துக்காட்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

•நயவஞ்சகர்கள்; நயவஞ்சகம் மற்றும்  நயவஞ்சகத்தனம் எதுவென்றால் ஒரு நபர் வெளிப்படையாக நாவினால் தான் நம்பிக்கை கொண்டு விட்டேன் என்று கூறுவதும்,வெளிப்படையாக தனது வார்த்தைகளால் ஒப்புக்கொள்வதும், நோன்பு நொற்பதும்,தன்னுடைய நம்பிக்கையை(இமான்) மக்களுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காக வணக்க வழிபாடுகள் செய்வதும்,ஆனால் மறைமுகமாக இதயத்தில் இஸ்லாத்திற்கு எதிரான நம்பிக்கை வைப்பதும் மேலும் முஸ்லிம்களிடம் சேர்ந்து இருக்கும் போது இஸ்லாமிய மார்க்கமே உண்மையான மார்க்கம் என்று கூறுவதும் அதே கா.ஃபிர்களிடம் இருக்கும் போது அவர்களுடைய நம்பிக்கையை உண்மைப்படுத்துவதும் அதை ஏற்றுக் கொள்வதும் இவர்களை குர்ஆனிய கண்ணோட்டத்தில் நயவஞ்சகர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

•முதல் அத்தியாயத்தின் முதல் அலகில் (சூரத்துல் பகரா, வசனம் 1 முதல் 39 வரை), இந்த மூன்று குழுக்களின் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன, குர்ஆனில் சந்தேகம் கொள்ளாதீர்கள், மூன்று பொன்னான அடிப்படைகளைப் பின்பற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது: ஏகத்துவம்(2:21,22) நபித்துவம்(2:22,24) மறுமை(2:25) இதற்கான விளக்கங்கள் சில்சிலா தப்ஸீர் குர்ஆனில் அசிமில் விளக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.

"அலகு எண்.1 இன் சில தலைப்புகள்"

•அல்குர்ஆன் சத்தியமும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நேரான வழிகாட்டுதலும் ஆகும். (2-1)

•விசுவாசிகளின் பண்புகள் மற்றும் அவர்களின் வெகுமதியும் (5-3)

•இறை மறுப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் சில பண்புகளைக் குறிப்பிட்டு, நயவஞ்சகர்களுக்கான இரண்டு உதாரணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன (6-20)

•அல்லாஹ்வை வணங்குவதின் கட்டளை, அல்லாஹ்வின் மகத்துவம் மற்றும் அவனது ஒருமைப் பற்றிய விளக்கம் (21-22)

•இறை மறுப்பாளர்களிடம் குர்ஆனின் கேள்வி இப்படியான ஒரு வார்த்தையைக் கொண்டு வர வேண்டும்(23)

•இறை மறுப்பாளர்களுக்கு நரகத்தின் அச்சுறுத்தல் மற்றும் நரகத்தின் பண்புகள்(24)

• மூஃமின்களுக்கு சொர்க்கத்தின் நற்செய்தி மற்றும் சொர்க்கத்தின் பண்புகளை குறிப்பிடு(25)

•குர்ஆனில் உதாரணங்களை விவரிக்கும் நோக்கம் மற்றும் நயவஞ்சகர்களின் பண்புகளின் குறிப்பிடு (26-27)

•படைப்பினங்களில் படைப்பாளரின் ஆற்றல்களின் வெளிப்பாடுகளின் குறிப்புகள் (28-29)

•பூமியில் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை கலீஃபாவாக ஆக்கப்பட்டதும் மற்றும் மலக்குகள் அதன் மீது ஆச்சரியப்படுதலும் மற்றும் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு அனைத்து பெயர்களும் கற்பிக்கப்படுவதைக் குறிப்பிடுதல் (30-32)

•அல்லாஹ்வின் அறிவு அனைத்தையும் உள்ளடக்கியது என்று ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் மலக்குமார்களின் சிரம் பணிதல் மூலமாக ஆதாமை கௌரவித்தல் (33-34)

•நபி ஆதமையும் ஹவ்வாவையும் சொர்க்கத்தில் வைத்து அவர்கள் இருவரையும் கௌரவித்தல் மற்றும் அவர்களை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றும் அளவிற்கு ஷைத்தானின் பகை (35-36)

•நபி ஆதம் அவர்கள் பாவமன்னிப்பு கூறுதல் மற்றும் அவரை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றுவது மற்றும் நேரான வழிகாட்டுதலைப் பின்பற்றவர்களுக்கான பலன். (37-38)

•அல்லாஹ்வை மறுப்பவரின் தண்டனையைப் பற்றி குறிப்பு (39)

•பனீ இஸ்ரவேலர்கள் மீது அல்லாஹ்வின் வெகுமதிகள் மற்றும் தாழ்மையானவர்களின் பண்புகளின் விளக்கம் (48-40)

•அலகு எண் 2:

•பனீ இஸ்ரவேலர்களுக்கு எச்சரிக்கையும் கண்டனமும்:

இரண்டாவது அலகு: சூரா அல்-பகரா: வசனம் 40 முதல் 48 வரை:- இந்த அலகில் இஸ்ரவேலர்களுடைய கிழ்படியான்மைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது,முந்தைய அலகில் தனித்தனியாக நபி ஆதமின் பாவமன்னிப்பு கோருதலும் மற்றும் இப்லீஸின் ஆணவம் பற்றி விவரிக்கப்பட்டிருந்தது இஸ்ரவேலர்களுக்கு நினைவூட்டப்பட்டன மற்றும் எச்சரிக்கையும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டன மேலும் நபி ஆதமைப்போல் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கூறி மீண்டு வரவும் இப்லீஸைப் போல் கர்வம் கொள்ள வேண்டாம் என்றும் இல்லாவிட்டால் அல்லாஹ் இப்லீஸைப் போல் உங்களையும் நிராகரித்து விடுவான்-

"அலகு எண்.2 இன் சில தலைப்புகள்"

•பனீ இஸ்ரவேலர்கள் மீது அல்லாஹ்வின் வெகுமதிகள் மற்றும் இறையச்சம் உடையவர்களின் பண்புகளின் விளக்கம் (48-40)

•அலகு எண்: 3

இவ்வசனங்களில் பனீ இஸ்ராயீல் இமாமத்திலிருந்து வெளியேற்றப்பட்ட போது அவர்கள் மீது அவமானமும், எவ்வாறு திணிக்கப்பட்டது என்பதும் இந்த வசனங்களில்  அனைத்து காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன எப்போது ஒரு சமூகம் அல்லாஹ்வை கீழ்படியவில்லையோ, பின்னர் அந்த சமூகத்தின் மீது அவமானமும் இழிவும் சுமத்தப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட வெகுமதிகள் பறிக்கப்பட்டு வீழ்ச்சியின் இருளில் மூழ்கடிக்கப்படுகிறார்கள்.

"அலகு எண்.3 இன் சில தலைப்புகள்"

•பனீ இஸ்ரவேலர்களை ஃபிர்வோன் நடத்திய விதம் பற்றிய குறிப்பு (49-61)

•இறை நம்பிக்கையாளரின் பொதுவான வெகுமதியின் குறிப்பு (62)

•யூதர்களின் அத்துமீறல்கள் மற்றும் அவர்களின் மீது உலக தண்டனைகளின் குறிப்புகள் (63-66)

•பசுவின் கதை மற்றும் அதன் மூலம் கிடைக்கின்ற  படிப்பினங்களின் குறிப்புகள் (67-73)

•யூதர்களின் இதயங்கள் கடினப்படுவதைப் பற்றிய விளக்கம் (74)

•பனீ இஸ்ரேல் மீதான வெகுமதிகள் மற்றும் பனீ இஸ்ரேலின் கீழ்ப்படியாமை மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள்!

••(வெகுமதிகள்)••

•அனைத்து படைப்பினங்கள் மீது சிறப்பு வழங்கப்பட்டது.

•ஃபிரவுனிடமிருந்தும் அவனது படையிடமிருந்தும் கடலில் வழியை உருவாக்கி வெற்றி அடைதல்.

•மூஸா நபியை 40 நாட்கள் இறைச் செய்திற்காக (தூர்) மலையின் மீது அனுப்பப்படுதல்.

•கன்றுக்குட்டியை வணங்கிய பின் மன்னிப்பு கிடைத்தது.

•தவ்ராத் கொடுக்கப்பட்டது.

•மரணதண்டனைக்குப் பிறகு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுதல்.

•மேகத்தின் நிழல்

•ஒரு நகரத்திற்குள் நுழைவதற்கான வழிவகை மற்றும் மன்னிப்பு, கருணையின் வாக்குறுதி.

•பன்னிரண்டு நீரூற்றுகளின் ஏற்பாடு

•பசுவை அறுப்பதற்கான கட்டளையில் அவர்களுக்கு ஒரு அத்தாட்சி காட்டப்பட்டது, மேலும் மரணத்திற்குப் பிறகு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைப் புரிந்துகொள்வது எளிதாக்கப்பட்டது மற்றும் கொலையாளியைக் கண்டுபிடிப்பதும் எளிதானது.

••(கீழ்ப்படியான்மை)••

•முதலில் நம்ப மறுப்பவராக இருக்காதீர்கள்.

•அற்ப ஆசைக்காக மார்க்கத்தை விற்று விடாதீர்கள்.

•மக்களுக்கு சரியான மற்றும் தவறான விஷயங்களில் கட்டளையிடுவது மற்றும் அவர்களே கீழ்படியாமையில் தங்கி இருப்பது அதை மீறுவது.

•கன்றுக் குட்டியின் வணக்க வழிபாடு.

•அல்லாஹ்வைக் காண வேண்டும் என்ற பிடிவாதத்தால் மின்னலின் தாக்கம்.

•மேகத்தின் நிழல் மற்றும் மன் சல்வாவின் அருட்கொடைக்கு பிறகு அல்லாஹ்வுக்கு மாறு செய்தல்.

•பூமியில் ஃபித்னா பரப்புதலின் கட்டளை இடுதல்.

•மன்-வஸ்லாவாவின் அருட்கொடை மீதான ஆட்சேபனைகள் மற்றும் உலகளாவிய காய்கறிகள் பற்றிய வினவுகள் மற்றும் உயர்ந்ததை ஒப்பிடும்போது குறைவு கேட்டல்.

•கட்டளைகளைக் கடைப்பிடிப்பது கடினம் மற்றும் தூர் மலையை எழுப்பி விளக்குதல்.

••(தண்டனைகள்)••

•அல்லாஹ்வை காண வேண்டும் என்ற பிடிவாதத்தால் மின்னல் மூலம் மரணம் ஏற்படுதல்.

•உண்ணுவதில் பருகுவதில் வேடிக்கையான செயல்பாடுகள்,இறை நம்பிக்கை அற்ற வார்த்தைகள் மற்றும் நபிமார்களை கொல்வது போன்ற கீழ்படியான்மையின் காரணமாக அவர்கள் மீது அல்லாஹ்வின் புறத்திலிருந்து தண்டனை இறக்கப்பட்டது.

•கட்டளைகளைக் கடைப்பிடிப்பது கடினம் என்று கூறியபோது தூர் மலையை எழுப்பி விளக்குதல்.

•அருகாமையின் தூரத்தில் தண்டனை மற்றும் அறிவுரை.

•மக்களுக்கு சரியான மற்றும் தவறான விஷயங்களில் கட்டளையிடுவது மற்றும் அதில் அவர்களே தங்கி இருப்பது அதை மீறுவது.

•உண்ணுவதில் பருகுவதில் வேடிக்கையான செயல்பாடுகள்,இறை நம்பிக்கை அற்ற வார்த்தைகள் மற்றும் நபிமார்களைக் கொல்வது போன்ற

கீழ்படியான்மையின் காரணமாக அவர்கள் மீது அல்லாஹ்வின் புறத்திலிருந்து தண்டனை இறக்கப்பட்டது.

•கட்டளைகளைக் கடைப்பிடிப்பது கடினம் என்று கூறியபோது, தூர் மலையை எழுப்பி விளக்கினர்.

•அல்லாஹ்வை பார்க்க வேண்டும் என்கின்ற பிடிவாதத்தால் மின்னலின் தாக்கம்.

•அருகாமையின் தூரத்தில் தண்டனை மற்றும் அறிவுரை.

•எத்தனையோ அடையாளங்களையும், அற்புதங்களையும், மன்னிப்பையும் பெற்ற பிறகும் படிப்பினைகளை எடுத்து சீர்திருத்துவதற்குப் பதிலாக, அவர்களின் இதயம் கல்லை விடக் கடினமானது.

•அலகு எண். 4

•நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் வாழ்ந்த யூத-கிறிஸ்தவர்களிடம் காணப்படும் கீழ்ப்படியாமைப் பற்றியக் குறிப்பு.

அலகு எண். 4, வசனம் எண். 75 முதல் வசனம் எண். 123 வரை அல்லாஹ்வின் கடைசி நபியின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் கீழ்ப்படியாமைப் பற்றிய குறிப்புகள்.

•முன்னர் குறிப்பிடப்பட்ட யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் கீழ்ப்படியாமைகள் (பனீ இஸ்ரேல்) அல்லாஹ்வின் தூதருடைய நபித்துவத்திற்கு முந்தைய நிகழ்வுகளைப் பற்றியது, ஆனால், சூரா அல்-பகரா, வசனம் 75, 123 இல் குறிப்பிடப்பட்டுள்ள யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் கீழ்ப்படியாமை அல்லாஹ்வுடைய தூதருடைய காலத்தில் நிகழ்ந்தவைகள்,யூதர்களும் கிறித்தவர்களும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படியாமல் நடந்து கொண்ட சம்பவங்களாகும் மேலும் அல்லாஹ்வுடைய தூதரை கொல்லவும் சதி செய்யப்பட்டது.

"அலகு எண்.4 இன் சில தலைப்புகள்"

• அல்லாஹ்வின் புத்தகத்தை யூதர்கள் திரித்துக் கூறுவது மற்றும் அவர்களின் பாசாங்குத்தனம் மற்றும் தண்டனை பற்றிய விளக்கம் (75-81)

•விசுவாசிகளின் வெகுமதியைப் பற்றிய குறிப்பு (82)

•யூதர்கள் உடன்படிக்கையை  மீறுதல்ப் பற்றிய குறிப்பு (83-86)

•நபிமார்களைப் பற்றிய யூதர்களின் நிலைப்பாடு (87-91)

•உடன்படிக்கை செய்த போதிலும் யூதர்களின் கீழ்ப்படியாமைப் பற்றியக் குறிப்பு (92-93)

•சொர்க்கம் அவர்களுக்கு மட்டுமே என்ற யூதர்களின் கூற்று மறுக்கப்படுகிறது (94-96).

•மலக்குமார்களுடன் யூதர்களின் பகையின் காரணம் மூலம் குப்ரு( 97-99)

•யூதர்களின் உடன்படிக்கை மீறுதல் மற்றும் நபிமார்களை நிராகரித்தல் பற்றிய குறிப்பு.(100-101)

•சூனியத்தின் உண்மைத்தன்மை (102-103)

•நபி (ஸல்) அவர்களிடம் யூதர்கள் தவறாகப் பேசுதல், இறை மறுப்பாளர்கள் நம்பிக்கையாளர்கள் மீது பொறாமையை கொள்ளுதல்.(104-105)

•சில வசனங்களை ரத்து ஆனதற்கான ஆதாரம் (106-108)

•விசுவாசிகள் மீது புத்தகம் வழங்கப்பட்ட மக்கள் பொறாமை கொள்ளுதல் மற்றும் விசுவாசிகளுடன் அவர்கள் போட்டி கொள்ளுதல் (109-110)

•யூத மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கைகளின் மறுப்பு (111-113)

•மஸ்ஜிதுகளில் அத்துமீரலின் செயல்பாடுகளில் ஈடுபடுதல்,எந்த இடத்திலும் தொழுதல் (114-115)

•புத்தகம் வழங்கப்பட்ட மக்கள் தங்களை அல்லாஹ்வின் பிள்ளைகள் என்று அறிவித்துக்கொள்வதைப் பற்றிய குறிப்பு (116-118)

•முஹம்மத் (சல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நபித்துவத்தின் குறிப்பு மற்றும் அதே நேரத்தில் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைப் பின்தொடர்வதில் நம்பிக்கையாளர்களுக்கு எச்சரிக்கை (119-121).

•பனீ இஸ்ரவேலர்கள் மீது அல்லாஹ்வின் அருட்கொடைகள் மற்றும் அவர்களுக்கு மறுமை நாளின் எச்சரிக்கை (122-123)

•அலகு எண்: 5

(நபி இப்ராஹிமின் வரலாறு மற்றும் அல்லாஹ்வுடைய தூதருடைய அழைப்பு பணியின் குறிப்பு)

அலகு எண். 5, சூரா அல்-பகரா வசனம் 124 முதல் 141 வரை இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாறும், நபி இப்ராஹிமின் அழைப்பு பணியின் செயல்பாடுகளும் மேலும் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் வழித் தவறிச் செல்வதின் குறிப்பு, எனவே, அல்லாஹ்வின் தூய மார்க்கமான இஸ்லாத்தின் இலக்கை நாம் பின்பற்ற வேண்டும், இது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களால் முன்வைக்கப்பட்டது, இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் பின்பற்றி காட்டினார்கள் மேலும் நபித் தோழர்களால் நிரூபிக்கப்பட்டதாகும்,அல்லாஹ்வுடைய தூதருடைய மார்க்கமும் நபி இப்ராஹிமுடைய மார்க்கமும் ஒன்றாகும்,யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் எந்த மார்க்கத்தை மாற்றி அமைக்க நாடினார்களோ அதை விட்டு எல்லா நபிமார்கள் தூரமாக இருந்தார்கள்.

"அலகு எண்.5 இன் சில தலைப்புகள்"

•நபி இப்ராஹிமின் சோதனைகளின் வரலாறு, காபாவின் கட்டுமானம் மற்றும் கட்டுமானத்திற்குப் பிறகு பிரார்த்தனை மற்றும் மக்காவின் நற்பண்புகளைப் பற்றிய செய்திகள் (124-129).

•நபி இப்ராஹிமின் வழிமுறையை விட்டு விலகுவதால் ஏற்படும் பாதிப்புகள்,யூதர்களின்  மத நம்பிக்கையை நிராகரித்தல் (130-141)

••விளக்கவுரை:

*சூரா பகரா மற்றும் சூரா ஆல இம்ரானின் பொதுவான கருப்பொருள் "நபித்துவத்தை உறுதிப்படுத்துதல்" என்பதாகும்.

*சூரா அல்-ஃபாத்திஹாவில் அல்லாஹ்வின் புகழும் , அடுத்த இரண்டு சூராக்களான பகரா மற்றும் ஆல இம்ரானில், "யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் ஆட்சேபனைகளுக்கு எதிராக நபித்துவத்தை உறுதிப்படுத்துதல்".

المغضوب*

*இது சூரா அல்-பகரா மற்றும் அன்-நிஸாவில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது

الضالين

*இது சூரா ஆல இம்ரான் மற்றும் சூரா மாயிதாவில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

"اهدنا"

- பிரார்த்தனை கோரப்பட்டது

هدي للناس"

பிராத்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது

- இந்த சூராவின் ஆரம்பம் ஜமாயி-இமான் (2:3), நடுப்பகுதியும் ஜாமி-இமான் (2:136) மற்றும் முடிவும் ஜாமி-இமான் (2:285) ஆகும்.

(யூத மதம் மற்றும் கிறிஸ்தவம் பற்றிய ஆய்வுகள் ஷேக் சவுத் அல்-கலா ஃப் எழுதியது

மஜ்முஉல் ஃபதாவா-19:108)

•••••••••••••••••••••••••••••••••••••••••••••

••இரண்டாவது அத்தியாயம் பற்றிய சுருக்கமான அறிமுகம்.

("அத்தியாயம் 2 – சாயக்குலு")

•புனித குர்ஆனின் இரண்டாம் அத்தியாயம் அல்லது இரண்டாம் ஜுசுவை "சைகுல்" என்று அழைக்கப்படுகிறது, இந்த பாரா சூரா அல்-

பகராவின் வசன எண்: 142 முதல் வசன எண்: 252 வரை அடங்கியுள்ளது. அறிஞர்கள் இந்த பகுதியை 6 “அலகுகளாக” பிரித்துள்ளனர். அல்ஹம்துலில்லாஹ்

•முதல் பகுதியின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளபடி, ஒவ்வொரு பகுதியின் அலகுகளும் ஒரு குறிப்பிட்ட “Theme” கொண்டுள்ளன, மேலும் ஒவ்வொரு “Theme” ஒரு குறிப்பிட்ட “Subject” உள்ளது, அதன்படி, “Units” இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது

••இரண்டாவது 6 அலகுகள் பின்வருமாறு:

அத்தியாம் எண். 2 இன் வசனங்கள் மற்றும் பாடங்களின் பிரிவு”

வசனங்கள்

பாடங்கள்

அலகுகள்

•அலகு:1

142-162 கிப்லாவின் பாதுகாப்பு மற்றும் யூத மற்றும் கிறிஸ்தவர்களின் ஆட்சேபனைகள் மற்றும் பதில்கள்.

அலகு எண்: 2

163-177 சட்டங்களால் சீர்திருத்தம் – “அல்பர்” வசனத்தில் அடங்கியுள்ளது, நன்மையை ஊக்குவிக்கும் வசனங்கள் உள்ளன.

அலகு எண்: 3

178-203 அல்பார் மற்றும் அகீதாவின் பரந்த அர்த்தத்திற்குப் பிறகு,ஃபிக் அல்-இபாதாத் பற்றிய போதனைகள் உள்ளன.

•அலகு எண்:4

204-220 அல்-அல்பரின் அத்தியாயங்கள் – ஆயத் அல்-அல்பரின் கூடுதல் விவரங்கள்.

•அலகு எண்:5

221-242 குடும்பச் சட்டங்களின் அறிக்கை.

அலகு எண்: 6

243-250 நபி தாவூத் சமூக-தேசிய உறவுகளுக்கும் அமைதிக்கும் சக்தியைப் பயன்படுத்துதல்.

*ஒவ்வொரு அலகுக்கும் அதன் சொந்த “Theme” மற்றும் “Topic” உள்ளது, ஆனால் அவை முடிவடையும் போது அவை ஒரு “Conclusion” அடைகின்றன. இது குர்ஆன் வசனங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை வலுப்படுத்துகிறது.

•ஒரு வசனம் மற்றொரு வசனத்தோடு ஆழமான தொடர்பை கொண்டுள்ளது,இரண்டாவது பாராவின் குறிப்பிட்ட “Theme” (சீர்திருத்த பயிற்சி) என்கின்ற தலைப்பில் உள்ளது.

அலகு எண். 1

இரண்டாவது ஜூசுவின் முதல் அலகு,சூரா அல்-பகராவின் 142 முதல் 162 வரையிலான வசனங்களைக் கொண்டுள்ளது, இது கிப்லாவின் திசையைப் பற்றி யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களால் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த விஷயத்தில் நம்பிக்கையாளர்களுக்கு இது போன்ற விஷயங்களில் பொறுமையை கையாள வேண்டும் என்று போதிக்கப்பட்டுள்ளது இதுவே எல்லா நபிமார்களின் வழிமுறையாக இருந்துள்ளது,பனூ இஸ்மாயில் இமாமத் பதவியை அடைந்துள்ளார்.

*நம்பிக்கையாளர்களுடைய மிக பலமான ஆயுதம் பொறுமையாகும்,பொறுமை என்கின்ற பண்பை கடைப்பிடித்ததன் மூலம் நபிமார்கள் வெற்றி அடைந்தார்கள் அதனால் நம்பிக்கையாளர்களாகிய நீங்களும் பொறுமையை கடைபிடியுங்கள் பொறுமையே உங்கள் வெற்றிக்கும் வெற்றிக்கும் உத்திரவாதம்.

*இறை-மறுப்பாளர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை ஆடம்பரமானது இந்த வாழ்க்கை தற்காலிகமானது நிரந்தரமான வாழ்க்கை மறுமையில் உள்ளது,இறை மறுப்பாளர்களுக்கு சில காலம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது உண்மை ஒரு நாள் வென்றே தீரும்,எனவே குறிப்பாக முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் கூறப்பட்டுள்ளது. நபிகள் நாயகத்தை அவர்கள் பைத்தியம், கவிஞர் போன்ற சொற்களால் அவருடைய மனதை நோகடித்தார்கள் ,21 ஆம் நூற்றாண்டில், கார்ட்டூன்கள் இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டு முஸ்லிம்களின் இதயங்களை அவமதித்தார்கள்,மேலும் சிலர் குர்ஆனுடைய சில வசனங்களை நீக்குமாறு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். மற்றும் இது போன்ற குர்ஆன் வசனங்களை பொய்யானவர்களால் ஆரம்ப முதல் நாளிலிருந்து இது போன்ற தந்திரங்களை கையாண்டுள்ளனர், ஆனால் உண்மை எப்போதும் அவர்களை வென்றது, ஆட்சேபனை தெரிவித்தவர்களின் பெயர்கள் மற்றும் அடையாளங்கள் கூட இல்லை, ஆனால் நபிகள் நாயகத்தைப் பின்பற்றுபவர்கள் அல்லாஹ்வின் (ஸல்) பின்பற்றிக்கொண்டு முந்தி சென்று விட்டனர்.

- சூரா அல்-பகராவின் ஆரம்ப வசனங்களில், பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் பொறுமை ஞானத்தை அளிக்கிறது மற்றும் பொறுமை பணிவு மற்றும் சகிப்புத்தன்மையின் கண்ணாடியாகும்.
- இப்போது கிப்லாவின் “தலைப்பு” இங்கிருந்து தொடங்குகிறது, யூதர்களும், கிறிஸ்தவர்களும் நபித்துவத்தை தெரிந்தே ஏற்க மறுத்தார்கள் மற்றும் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் உண்மையான ரசூல் என்று அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது,

•அதே நேரத்தில் அல்லாஹ் கிப்லாவின் கட்டளையை வெளிப்படுத்தியபோது யூதர்களும் கிறிஸ்தவர்களும் மக்களை சந்தேகத்தை ஏற்படுத்த எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொண்டனர், இஸ்லாத்தின் முக்கியமான ஸஃபா மற்றும் மர்வாவைப் பற்றிய வதந்திகளையும் பரப்பினர் மற்றும் தடைகளை உருவாக்க முயன்றனர், ஆனால் உண்மையான நம்பிக்கைக் கொண்டவர்கள் யூதர்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பொறுமையாக சூழ்நிலையை கையாண்டனர்,இதைப் போன்று இந்த அலகில் உம்மத்தே முஹம்மதியாவுடைய உண்மைத்தன்மை அறிவிக்கப்படுகிறது.

“அலகு எண்.1 இன் சில தலைப்புகள்”

•கிப்லாவைப் பற்றிய குறிப்பு மற்றும் யூதர்களின் எதிர்வினை (145-142)

•நபிகளாரின் பண்புகளைப் பற்றிய யூதர்களின் அறிவுக் குறிப்பு (146-147)

•தொழுகையில் காபாவை எதிர்நோக்கி தொழுவதும் மற்றும் கடமையும் ஞானமும் (148-150)

•நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரத்தைப் பற்றிய குறிப்பு (151)

•பொறுமை மற்றும் அதன் வெகுமதி மற்றும் சோதனைக் குறிப்பு (152-157)

•சஃபாவிற்கும் மர்வாவிற்கும் இடையில் (சஃயி) செய்வதுப் பற்றிய குறிப்பு (158)

*அலகு எண் :2

•இரண்டாம் பகுதி/பகுதியில், சூரா அல்-பகரா வசனங்கள் 163 முதல் 177 வரை, பனீ இஸ்ராயில் மற்றும் குர்ஆன் ஓதுபவரின் சீர்திருத்தம் பற்றிய சட்டக் குறிப்பு உள்ளது,இதற்கு முன்னரும் பனீ இஸ்ரேலின் சீர்திருத்தத்தைப் பற்றி படித்துள்ளோம் ஆனால் இங்கே குறிப்பாக பனீ இஸ்ரவேலர்களை இங்கு ஏழு விதமான சட்ட முறையில் சீர்திருத்தப்படப்படுகின்றது.

•சூரத்துல் பகராவை இரண்டு பெரிய பகுதிகளாகப் பிரித்துள்ளனர் (அல்லாமா ரஷீத் ரசானி) முதல் பகுதியை சீர்திருத்தம் மற்றும் வரலாறு மற்றும் வரலாற்றில் வெற்றி பெற்ற மற்றும் தோல்வியுற்ற நபர்களின் நிகழ்வுகள் மற்றும் காரணங்கள் பற்றி விளக்கியுள்ளனர்.

•இரண்டாம் பகுதியில் மார்க்க சட்ட அடிப்படையில் சீர்திருத்தம் மற்றும்  வெற்றி அடைந்தவர்கள்ப் பற்றிய வழிமுறை.

உதாரணமாக, சூரா அல்-பகராவின் வசனங்கள் 1 முதல் 142 வரை வெற்றி பெற்றவர்கள் மற்றும் தோல்வியடைந்தவர்கள் பற்றிய சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன, இஸ்லாத்தின் பாதையில் சென்றவர்கள் மட்டுமே வெற்றி பெற்றவர்கள், மாறாக இஸ்லாம் அல்லாத வழிமுறையை பின்பற்றியவர்கள் தோல்வி அடைந்தவர்கள்  இஸ்லாத்தின் பாதைக்கு நபிமார்கள் மூலம் உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது, எப்படி இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்), இஸ்மாயில் (அலைஹிஸ்ஸலாம்), மூஸா (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) இஸ்லாத்தின் பாதையில் நடந்து வெற்றியை அடைந்தனர், எனவே சூரா அல்-பகரா வசனம் எண்: 143 இலிருந்து, உரையாடலின் கவனம் மாறுகிறது மற்றும் இங்கிருந்து மார்க்க சட்ட அடிப்படையில்  "Rules" மற்றும் "Regulation" கூறப்பட்டுள்ளது, இதன் சுருக்கம் "சீர்திருத்த முறை" மூலம் சீர்திருத்தம், அதாவது ஒரு முஸ்லிம் தனது வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும், இது சம்பந்தமாக, சூர அல் பகரா 163வது வசனம் முதல் 177வது வசனம் வரையிலிருந்து ஆரம்பமாகிறது.

•ஆகவே இங்கு முதலில் ஏகத்துவம் மற்றும் வஹீ மூலம் மக்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது , அதன் பிறகு முன்னோர்களின் வழியை பின்பற்றியவர்கள் கட்டுக்கதைகளையும்

குருட்டுப் பாவனைகளையும் பின்பற்றியவர்கள் இப்போது இறை வெளிப்பாட்டின் பக்கம் திரும்பினர், அதன் பிறகு அவர்கள் ஹலாலான வாழ்வாதாரத்தைப் பெற ஊக்குவிக்கப்பட்டு, ஹராமான வாழ்வாதாரத்தின் தீமைகள் விலக்கப்பட்டு இறந்த உடல், ஓடும் இரத்தம்,பன்றிகள் அல்லாஹ் அல்லாதவர்களின் பெயரால் அறுக்கப்பட்ட பிராணி ஹராம் என்று விளக்கப்பட்டுள்ளது.

“அலகு எண்.2 இன் சில தலைப்புகள்”

•மறைக்கப்பட்ட கல்வியின் தண்டனை மற்றும் அவ-நம்பிக்கையில் மரணிப்பவர்களுக்கான கட்டளை(159-162)

•அல்லாஹ்வின் ஒருமை(வஹ்தானியத்) மற்றும் அவனது சக்தியின் வெளிப்பாடுகளின் குறிப்பு (163-164)

•மறுமை நாளில் முஷ்ரிக்குகளின் நிலையும் அவர்களைப் பின்பற்றுபவர்களின் இருப்பிடமும் (165-167)

•தூய்மையான மற்றும் ஹலாலான பொருட்களை உண்பது மற்றும் சைத்தானை எதிர்ப்பது மற்றும் அவனை எதிரியாகக் கருதுவது போன்ற குறிப்பு (168-169)

•குருட்டு நம்பிகையின் குறிப்பு (170)

•கா.ஃபிர்களுக்கு ஒரு உதாரணம் கூறப்பட்டுள்ளது (171)

•தூய்மையானவற்றை உண்பதும் மற்றும் அதற்கு நன்றி செலுத்துதல் மற்றும் தடை செய்யப்பட்டவைகளுக்கான குறிப்பு (172-173)

•மறைக்கப்பட்ட உரிமைகளுக்கான தண்டனை (176-174)

*அலகு எண். 3

•சூரா அல்-பகரா வசனம் 177 முதல் வசனம் 203 வரை, இந்த வசனங்கள் “ஆயத் அல்-அபர்” என்று அழைக்கப்படுகின்றது, இங்கு நல்ல செயல்களின் எடுத்துக்காட்டுகள் விவரிக்கப்பட்டு அவற்றை எவ்வாறு செய்வது என்பது குறித்த வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன:

•அப்ர் வசனத்திற்கு பிறகு கிஸாஸ் விவகாரம் விளக்கப்படுகிறது மக்களின் உயிரைப் பாதுகாப்பது எப்படி சாத்தியம் என்று.

•மேலும் வசியத் மற்றும் தற்கி உடைய பிரச்சனைகள் விவரிக்கப்பட்டுள்ளன தற்கியுடைய சட்டத்தை அறிந்து கொள்வதன் மூலம் மக்களுடைய சொத்துக்களை பாதுகாக்க முடியும் இதன் மூலம் ஒரு சிறந்த சமுதாயம் உருவாகும்.

•அதன் பிறகு நோன்பின் சட்ட திட்டங்கள் விளக்கப்பட்டுள்ளன நோன்பு யாரின் மீது கடமையாகும் யார் மீது கடமை கிடையாது என்று.

•அதன் பிறகு பிரார்த்தனையின் முறை விளக்கப்பட்டது.

•அதன் பிறகு இஃதிகாப்பின் வழிமுறை விளக்கப்பட்டுள்ளது.

•அநியாயமான முறையில் செல்வத்தை உண்பது பற்றி கூறப்பட்டுள்ளது.

•அதன்பின் தற்காப்பு பற்றி விளக்கப்பட்டுள்ளது பலம் மற்றும் அதிகாரம் உரிமை போன்றவைகள் அமைதிக்காக பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

•அதன் பிறகு அநியாயமாக கொலை செய்வதும் பயங்கரவாதமும் குழப்பம் ஏற்படுத்துவதும் அறவே ஹராம் ஆக்கப்பட்டுள்ளது.

•அதன் பிறகு நயவஞ்சகத் தன்மையுடைய பண்புகள் விளக்கப்பட்டுள்ளது,அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வது மற்றும் தான தர்மத்தின் சிறப்புகள் விளக்கப்பட்டுள்ளது.

•அதன் பிறகு, ஹஜ்ஜின் விளக்கம் தரப்பட்டுள்ளது.

•சூரா அல்-பகராவில், வசனம் 178 முதல் வசனம் 203 வரை, அனைத்து நல்ல அமல்களைப் பற்றி விளக்கப்பட்டது, அதனால் தான் இந்த வசனங்கள் “ஆயத் அல்-அல்பர்” என்றும் அழைக்கப்படுகின்றன.

“அலகு எண்.3 இன் சில தலைப்புகள்”

•”அல்பார்” என்பது நன்மையின் உண்மை விளக்கப்படுகிறது (177).

•கிசாஸின் ஞானத்தைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது (178-179)

•(வசியத்)உயிலின் கடமையின் விளக்கம் மற்றும் அதை மாற்றுவதற்கான தடை (180-182)

•ரமலான் மாதத்தின் சிறப்பு மற்றும் நோன்பு நோற்பதின் சிறப்புகள்(183-185)

•பிரார்த்தனையின் சிறப்பு மற்றும் அதை ஏற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளின் விளக்கம் (186)

•நோன்பு நோற்பதின் விதிமுறைகள்(187)

•அநியாயமான முறையில் மக்களின் செல்வத்தை உண்பதற்கான தடை(188)

•சந்திரனைக் கணக்கிடுதல் மற்றும் நன்மையின் உண்மைத்தன்மை (189)

•அல்லாஹ்வின் பாதையில் போரிடுதல் மற்றும் அல்லாஹ்வின் வழியில் இன்ஃபாக் (195-190)

•ஹஜ் மற்றும் உம்ராவின் வழிமுறை (196-203)

*அலகு எண். 4

சூரா அல்-பகரா வசனம் 204 முதல் வசனம் 220 வரை “அபு-அல்-அப்ர்” என்றும் அழைக்கப்படுகிறது, இன்னும் வசன அப்ர்ரின் அதிகமான விளக்கம் “அபு-அல்-அப்பரில் விளக்கப்பட்டுள்ளது.

*அலகு எண். 5

சூரா அல்-பகராவின் வசனம் 221 முதல் வசனம் 242 வரை, குடும்பச் சட்டங்கள் மற்றும் குடும்ப அமைப்பு பற்றிய விளக்கம் உள்ளது, அதாவது குடும்ப அமைப்பின் சீர்திருத்தம் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது குடும்பத்தின் பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன, ஹலால் மற்றும் ஹராம் திருமண உறவுகள்

வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன மேலும் உடலுறவின் ஹலால் மற்றும் ஹராமான முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

•சத்தியம் செய்வதின் ஹலால் மற்றும் ஹராமான வழிகள் விவரிக்கப்பட்டுள்ளன.

•தாய்ப்பால் ஊட்டுவதின் விளக்கம் குறிக்கப்பட்டுள்ளன.

•அதனுடைய வழிமுறை கூறப்பட்டுள்ளது ", "متوفى عنها அதாவது ஒரு பெண்ணின் கணவர் இறந்து விட்டால் எந்த கால அளவு இத்தா இருக்க வேண்டும் என்கின்ற கால அளவு கூறப்பட்டுள்ளது மற்றும் தொழுகையை பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

"அலகு எண்.5 இன் சில தலைப்புகள்"

•நயவஞ்சகர்கள் மற்றும் விசுவாசிகளின் பண்புகளைக் குறிப்பிடுதல் (204-207)

•ஷைத்தானை பின்தொடர்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற கட்டளையும் அவனை எதிரியாகக் கருதுவதும் (208-210)

•பனீ இஸ்ரேலின் சூழ்நிலைகளின் குறிப்பு (211)

•நிராகரிப்பவர்களின் உண்மை நிலை மற்றும் அவர்களின் மீது இறையச்சமுடையோரின் மேலாதிக்கம் (212)

•மக்களுக்கு தூதர்களின் தேவை மற்றும் தூதர்களைப் பின்பற்றுபவர்களுக்கான சோதனைகளைக் குறிப்பு (213-214)

•செலவுகளை எங்கு செலவழிக்க வேண்டும் என்றக் குறிப்பு (215)

•மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும் கடமை மற்றும் அதன் சில கட்டளைகளைக் குறிப்பிடு (21-217)

•முஃமின்கள் முஜாஹிதீன்கள் மற்றும் அவர்களின் நோக்கம் பற்றிய குறிப்பு (218)

•மது மற்றும் சூதாட்டத்தால் ஏற்படும் தீமைகள் பற்றிய குறிப்பு (219)

•அனாதைகளோடு அன்பாக நடந்து கொள்வதற்கான கட்டளை (220)

•முஷ்றிக்கான பெண்கள் மற்றும் ஆண்களுடன் திருமணத்திற்கான தடை மற்றும் அதன் காரணங்கள் பற்றிய விளக்கம் (221)

•மாதவிடாய் காலத்தில் பெண்களிடமிருந்து விலகி இருக்க உத்தரவு (222)

•பெண்களின் பின் உறுப்பில் உடலுறவு கொள்வதற்கான தடை (223)

•அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வதின் வழிமுறை (224-225)

•பெண்களுக்கு ஏலா உத்தரவு (226-227)

•விவாகரத்து செய்யப்பட்ட பெண்ணின் இத்தா, விவாகரத்தின் கணக்கீடு மற்றும் விவாகரத்து மீதான தீர்ப்புகள் (228-230)

•விவாகரத்து ஆனவர்களோடு அன்பாக நடந்து கொள்ளுதல் (231-232)

•தாய்ப்பால் ஊட்டுதல் பற்றிய விதிகள் மற்றும் குழந்தையின் மீது தந்தையின் கடமை (233)

•விதவைப் பெண்ணின் இத்தா முறைப் பற்றிய விளக்கம் (234-235)

•உடலுறவுக் கொள்ளும் முன் விவாகரத்து கொடுக்கப்பட்டோரின் உரிமைகள் பற்றிய குறிப்பு

(236-237)

•தொழுகையின் பாதுகாப்புப் பற்றிய குறிப்பு (238-239)

- அலகு எண்:6

••சூரா அல்-பகரா வசனம் 243 முதல் வசனம் 250 வரை, சமூக அமைப்பு பற்றிய விளக்கம் உள்ளது, இரு தேசங்கள் அல்லது இரண்டு குழுக்களுக்கிடையில் நல்லிணக்கம் எப்படி சாத்தியமாகும் அல்லது தேசிய அல்லது சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் பரஸ்பர பகை மற்றும் பகைமையை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது. மேலும் இஸ்லாத்தில், அன்பும் பகைமையும் ஷரியத்தின் விதிகள் மற்றும் பழக்கவழக்கங்களின் வெளிச்சத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

•இந்தப் பிரச்சனைகள் அனைத்தும் இந்த வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளன, மேலும், இந்த வசனங்களில் மரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது எல்லாம் வல்ல அல்லாஹ் உயிரைக் கொடுத்தான், எல்லாம் வல்ல அல்லாஹ் மரணத்தைத் தருவான், எவருடைய நம்பிக்கை மரணம் அடைகிறதோ அவர்களுடைய நடத்தையும் விளக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த குறிப்பில் “ஜாலூத்” இன் உதாரணம் கூறப்பட்டுள்ளது தாலூத் எப்படி அனுப்பப்பட்டது மற்றும் “சகினா” என்று குறிப்பிடப்பட்டு அதன் மூலம் அடையாளங்கள் விளக்கப்பட்டு,பனி இஸ்ரேல் தாலூத்தின் தலைமையில் மற்றும் அவரது மேற்பார்வையில் போரிட உத்தரவிடப்பட்டது, ஆனால் பனி இஸ்ரேல் கீழ்ப்படியவில்லை. தாலூத் குழந்தைகளிடம் கூறினார் இஸ்ரேல் தண்ணீர் குடிக்கவில்லை, ஆனால் இஸ்ரவேல் புத்திரர் தண்ணீர் ஊற்றிய பிறகு தண்ணீர் குடித்தார்கள், ஆனால் இஸ்ரேலியர்கள் தாலூத்தின் கட்டளையை பின்பற்றி கீழ்ப்படிந்தார்கள், தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) முதலில் ஒரு இராணுவ தளபதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது,பின்னர் அல்லாஹ் தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான்,தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவருடைய படையில் ஏராளமான முஸ்லிம்கள் இருந்தார்கள், தாளுத்திற்கு எதிராக ஒரு மிகப்பெரிய போர் நடைபெற்றது அதில் நபி தாவூத் தாளுத்தை கொன்றார்.

- அலகு எண்:6, தலைப்புகள்“6

•விதவைகள் மற்றும் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களின் சில விதிகள் (240-242)

•அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் மற்றும் செலவுச் செய்பவர்களின் சிறப்பு

(244-245)

•பனீ இஸ்ரவேல் சந்ததி -மற்றும் தாலுத் மற்றும் ஜாலுத்தின் சம்பவம் (246-252)

••••••••••••••••••••••••••••••••

••மூன்றாவது அத்தியாயத்தின் ஒரு சிறிய அறிமுகம்.

“அத்தியாயம் எண். 3- தில்கார்-ருசுலு”.

“தில்க்ர்-ருசல்” மூன்றாம் அத்தியாயம், இந்த பகுதியை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்: முதல் பகுதி சூரா அல்-பகராவின் இறுதி பகுதி என்று அழைக்கப்படுகிறது, இந்த பகுதியில் குர்ஆனின் இரண்டு மிகப் பெரிய மற்றும் சிறந்த வசனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

(1) ஆயத்துல் குர்ஸி 12 காரணங்களுடன்(With 12 Reasons)

2) பரிவர்த்தனைகள், வர்த்தகம் மற்றும் கடன் விவகாரங்கள் மற்றும் சிக்கல்கள் ஆகியவை அடங்கும்.

[இரண்டாவது பகுதி சூரா ஆல-இம்ரானின் ஆரம்ப வசனங்கள் உண்மையில் வழக்கு வடிவில் உள்ளன].

•இந்த வசனத்தின் தொடக்கத்தில் சூரா அல்-பகராவின் கடைசி பகுதியின் முடிவு உள்ளது, அதாவது சூரா அல்-பகரா சுமார் மூன்றரை வசனங்களைக் கொண்டுள்ளது.

•அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மதீனா வந்த போது முதலில் இறக்கப்பட்ட சூரா அல்-பகரா ஆகும்.

•இடம்பெயர்வுக்கும் சூரா அல்-பகராவின் வெளிப்பாடுக்கும் இடையே ஒரு பெரிய தொடர்பு உள்ளது.

- அதாவது மதீனாவில் நபிகளாருக்கு “நீதி அதிகாரம்/Judicial Power” வழங்கப்பட்டது,

மதீனாவில் மக்கள் வாழும் வகையில் ஆட்சி முறையை "Mission" அவர்களுக்கு கொடுக்கப்பட்டு சமத்துவம் நிலைநாட்டப்பட, மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட ,சூரா அல்-பகராவில், அவர்களின் பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் "Road Map" கொடுக்கப்பட்டுள்ளது (எ.கா.) சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பு, குடும்ப அமைப்பு, ராணுவம் இந்த எல்லா விஷயங்களிலும் "Policy" மற்றும் கொள்கை எப்படி "நிர்வகிப்பது" போன்றவைகள் கூறப்பட்டுள்ளது.

*முதற்கட்ட வேலையாக மார்க்கத்தை எத்தி வைப்பதாக இருக்கிறது எல்லாக் காலகட்டத்திலும் நபிமார்கள் கடைப்பிடித்ததைப் போல, முதலில்

மார்க்க அழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மேலும், மேற்கண்ட சட்டங்களின்படி, செயல் திட்டத்தை முன்வைப்பதில் ஒரு பெரிய நிலைத்தன்மை உள்ளது மதினா மாநகரில் சூர பகரா அருளப்பட்டதுக்கு முக்கிய காரணம் ஏகத்துவம், தவ்ஹீத் மற்றும் மறுமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது, மேலும் மதனி கால விவகாரங்கள், பொருளாதாரம் மற்றும் ஒழுங்குகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

- இமாம் குர்துபி(ரஹ்மத்துல்லாஹி அலை) அவர்கள் கூறுகிறார், சூரா அல்-பகரா 9 ஆண்டுகளில் அருளப்பட்டுள்ளது, அதாவது, நபி (ஸல்) அவர்களின் மதனி வாழ்க்கை 10 ஆண்டுகளாகும், அந்த 9 ஆண்டுகளில் வேறுபட்ட பல பகுதிகளாக அருளப்பட்டுள்ளது,

சூர அல்-பகரா மற்றும் பிற சூராக்கள் அவ்வப்போது தொடர்ந்து இந்த 9 ஆண்டுகளில் அருளப்பட்டிருக்கின்றன.

•திருக்குர்ஆனின் மூன்றாம் பகுதி "தில்கர் ருசூல்" என்று அழைக்கப்படுகிறது,மார்க்க அறிஞர்கள் மூன்றாம் அத்தியாயத்தை 10

அலகுகளாக பிரித்துள்ளனர், முதல் 4 அலகுகளில் சூர அல்-பகரா உள்ளது மற்றும் ஐந்தாவது அலகு சூர ஆல இம்ரானுடன் தொடங்குகிறது, மூன்றாவது அத்தியாயத்தின் 10 அலகுகள் பின்வருமாறு அவை:

*அத்தியாயம் எண் 3 “தில்கர் ருசூல்” இன் வசனங்கள் மற்றும் கட்டுரைகளின் பிரிவு அலகுகளின்படி:

அலகுகள்

வசனங்கள்

பாடங்கள்

*அலகு எண்: 13

243-261 பனீ இஸ்ரவேலர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்கள் சில சமயம் பிளேக் பயத்தாலும்,சில சமயம் கொலையின் கட்டளையின் பயத்தாலும், நபி தாவூத்(அலை) மூலமாக ஜாலூத்தின் முடிவின் குறிப்பு,பிளேக் பற்றிய குறிப்பு-நபிமார்களின் நற்பண்புகள் மற்றும் ஏகத்துவத்தின் நோக்கம் அயத்

அல்-குர்சி மூலம்,தவ்ஹீதே ரிசாலத் மற்றும் மறுமையைப் பற்றிய விளக்கம் பல்வேறு நிகழ்வுகளின் மூலமாக.

*அலகு எண்: 2

262-273 செலவு செய்தல்; தர்மத்தின் மூலம் செல்வம் பெருகும் மாறாக பற்றாக்குறை ஏற்படாது மற்றும் பல்வேறு விளக்கங்கள்.

*அலகு எண்: 3

274-283 மார்க்க விஷயம்,பரிவர்த்தனை விஷயம்,அடமானம், நன்மை மற்றும் நல்ல காரியங்களைப் பற்றி ஊக்குவிக்கப்படுகிறது மற்றும்

வட்டி தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் இந்த விஷயத்தில் எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

*அலகு எண்: 4

284-286 அனைத்திற்கும் சொந்தக்காரன் அல்லாஹ் ஒருவனே, ஈமான் இரண்டு பெரிய வசனங்களில் முடிவடைகிறது மற்றும் அஃத்தியுள்ள (வ) அஃத்தியூர் ரசூலின் முக்கியத்துவம், அல்லாஹ் மனிதனுக்கு அவனது சக்திக்கு ஏற்ப சட்டதிட்டங்களை வழங்கியுள்ளான்,இறுதியாக மன்னிப்பு பற்றிய குறிப்பு உள்ளது.

••••••••••••••••••••••••••••••••

**சூரா ஆல இம்ரான்**

*அலகு எண்: 5

•1-9 சூரா ஆல இம்ரானின் அறிமுகம் “Preface” வடிவில் [சூரா ஆல-இம்ரானின் ஆரம்ப வசனங்களும் சூரா அல்-பகராவின் தொடர்ச்சியை விவரிக்கின்றன].

*அலகு எண்: 6

•10-18 இந்த அலகு சூரா ஆல-இம்ரானின் இரண்டாவது வழக்கைப் போன்றது, இதில் நசாராக்களின் வழக்கை விவரிக்கப்பட்டுள்ளது மற்றும் இது பத்ர் போரின் பின்னணியையும் குறிப்பிடுகிறது மற்றும் சந்தேகத்திலிருந்தும் தடுக்கப்பட்டது மற்றும் மறுமை சிந்தனை பற்றி ஊக்கி வைக்கப்பட்டுள்ளது.

*அலகு எண்: 7

•19-32 இஸ்லாத்தின் மகத்துவத்தின் விளக்கம், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் தவறான நடத்தை மற்றும் இஸ்லாத்தின்

பாதையைப் பின்பற்ற நபி முஹம்மது(ஸல்) அவர்களின் சமூகத்திற்கு அறிவுரை.

*அலகு எண்:8

•33-44 இந்த அலகின் முதல் குறிப்பு அல்லாஹ்வுடைய தூதரை பின்பற்ற வேண்டும் என்பதாகும் அதன் பிறகு அபு அல்-பஷ்ர்,ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பெயரைத் தொடர்ந்து,நபி நூஹ்,அபுல் அம்பியா நபி இப்ராஹிம்(அலை) அவர்களின் பெயரும் பிறகு,ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் ஈசா(அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பிறப்புப் பற்றி கூறப்பட்டுள்ளது மற்றும் கிறிஸ்தவர்கள் புறத்திலிருந்து நபி ஈசாவை “இபுனுல்லாஹ்” என்று கூறப்படுவதும் மற்றும் அல்லாஹ் கிறிஸ்தவர்கள் மீது கோபம் கொள்வதுப் பற்றிய குறிப்பு உள்ளது.

*அலகு எண்: 9

•45-63 குழந்தையாக இருந்தபோது நபி ஈசாவின் பேசுதல் பற்றிய குறிப்பு மற்றும் முபாஹ்லாவைப் பற்றிய குறிப்பு உள்ளது.

*அலகு எண்:10

•64-92 நபி இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கைகளில் இருந்து அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதின் பற்றிய அறிவிப்பு, முந்தைய நபிமார்களிடம் உடன்படிக்கை வாங்கப்பட்டது இறுதி நபி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வரும்போது,அந்த நேரத்தில் அவரைக் கீழ்ப்படிய வேண்டியதன் பற்றிய குறிப்பு.

••குறிப்பு: சூரா ஆல-இம்ரானின் வசனம் எண் 92, இது நான்காவது அத்தியாயத்தின் ஒரு பகுதியாகும், ஆனால் கட்டுரையின் படி மூன்றாவது அத்தியாயத்தின் பத்தாவது அலகில் சேர்க்கப்பட்டுள்ளது.

*அலகு எண்: 1

•மூன்றாவது அத்தியாயம் “தில்கர்-ரசூலின்” முதல் அலகு சூரா அல்-பகராவின் வசனம் 251 முதல் வசனம் 261 வரை உள்ளது, இதில் ஜாலூத் கொல்லப்பட்டதைக் பற்றிய குறிப்பும் உள்ளது, தாவூத்(அலைஹிஸ்ஸலாம் ஜாலூத்தை எவ்வாறு கொன்றார்,நபி தாவூத்(அலை) அவர் உடல் வலிமை கொண்டவராக இருந்தார்,அல்லாஹ் அவருக்கு ராஜ்ஜியத்தை வழங்கி இருந்தான், அவருக்குப் பிறகு, அவருடைய மகன் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அரச பதவியும் நபித்துவமும் வழங்கப்பட்டது,

தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) தாலுத் மன்னரின் படையில் சிப்பாயாக இருந்தார்,

ஆனால் படிப்படியாக தாவூத்(அலை) அவர்கள் ஒரு சிறந்த சிப்பாயாகி பின்னர் தளபதியாகி தாவூத் (அலை) ஜாலூத்தை கொன்றார்,

அவருடைய இந்த வீரச் செயல் மக்கள் மத்தியில் பிரபலமானது அதன் பிறகு மக்கள் பனீ இஸ்ரவேலர்கள் அவரைத் தங்கள் தலைவராக அங்கீகரித்தனர்,

அல்லாஹ் நபி தாவூதிற்க்கு கல்வி வழங்கினான் பிறகு ஆட்சியும் வழங்கினான்.

*பனீ இஸ்ரவேலர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினர், ஆனால் எல்லாச் சூழ்நிலைகளிலும் மரணம் வந்தே தீரும், அதை யாராலும் தடுக்க முடியாது, பின்னர் அல்லாஹ் சுப்ஹானஹு வத்தலா இறக்க கட்டளையிட்டான், அதனால் அவர்கள் இறந்தனர், பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவர்கள் வாழ்ந்தனர் இது அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஒரு அற்புதமாக இருந்தது இதுபோன்ற ஐந்து அற்புதங்கள் புனித குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ளன:

*குகை தோழர்களின் கதை(அஸ்ஹாபே கஃப்)

*சூரத் அல்-பகராவில் பசுவின் கதை

*நபி இப்ராஹிம் மற்றும் நம்ரூத் இடையே நடந்த விவாதம்

*நபி இப்ராஹிமுக்கு பதிலளிக்கும் விதமாக, பறவைகள் கொல்லப்பட்டு,பின்னர் உயிர்ப்பிக்கப்பட்டன

*ஒரு மனிதனுக்கு மரணம் கொடுக்கப்பட்டு, நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அவன் உயிர்ப்பிக்கப்பட்டான், அவன் எல்லாவற்றையும் மறந்திருந்தான்,அதனால் அவனுக்கு நினைவூட்டப்பட்டது இது உன் கழுதை மேலும் அவருக்கு மற்ற அடையாளங்கள் காட்டப்பட்டன,அதன் பிறகு அவர் நினைவு கூர்ந்தார் அவர் மீண்டும் உயிர் உயிர்த்தெழுந்துள்ளதை உணர்ந்தார்.

*மேற்கண்ட அனைத்தும் திருக்குர்ஆனில் தவ்ஹீத்,நபித்துவம் மற்றும் மறுமைக்கு சான்றாக அனைத்து நிகழ்வுகளும் முன் வைக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த நிகழ்வுகளும் புனித குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பதற்கு சாட்சிகளாகும் இதில் எந்த சந்தேகமும் இல்லை.

*தூதர்கள் மூலமாக ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லாஹ் மனிதகுலத்தை வழிநடத்தினான் மற்றும் அவன் நபிமார்களையும் ரசூல்மார்களையும் ஒவ்வொரு காலகட்டத்திற்கும்,இடத்திற்கும்

தேசத்திற்கும் ஏற்ப ஒவ்வொரு தூதர்களையும் தனித்தனியாக அனுப்பினான்.

*அல்லாஹ் ஒவ்வொரு நபிமார்களுக்கும் தனிச்சிறப்பைக் கொடுத்திருந்தான் ஆனால் அனைத்து நபிமார்களின் அழைப்பின் நோக்கம் ஒன்றாகவே இருந்தது எல்லா நபிமார்களும் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்காகவே அனுப்பப்பட்டிருந்தார்கள்

மற்றுமொரு பொதுவான அம்சம் என்னவென்றால், அனைத்து நபிமார்களும் ஒரே அல்லாஹ்வை வணங்குங்கள் என்று அழைப்பு விடுத்தர் இதற்கு சிறந்த ஆதரமாக ஆயத்துல் குர்ஸி திகழ்கிறது இந்த அலகின் ஆயத்துல் குர்ஸி முக்கியமான பங்காகவும் இருக்கிறது,மஸ்ஜிதே நபவியில் என்னுடைய ஒரு ஆசிரியர் இருக்கிறார் அவருடைய பெயர் அஷேக் பதறுல் இபாத் அவருடைய சொற்பொழிவில்(தரசில்) ஒரு வருடம் கலந்து கொள்ளும் பொழுது என்னுடன் சேர்த்து மூன்று நான்கு பேர் தான் இருந்தோம் அதே பத்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நான் சென்று பார்த்த பொழுது அவருடைய சொற்பொழிவில் மதிப்பிற்குரிய ஷேக்கின் போதனைகளால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயனடைவதை நான் கண்டேன் இதை நான் கவுரவமாக எண்ணுகிறேன்,

ஷேக்யின் சொற்பொழிவின் மூலமாக இமாம் இப்னு தைமியா மற்றும் இமாம் இப்னு கையும் அவர்களின் புத்தகத்தின் விளக்கத்தை ஷேக் நாசிர் அஸ் ஸஃதி அவர்கள் ஒன்று சேர்த்திருந்தார்கள் இமாமின் புத்தகங்களின் சுருக்கம் இஸ்லாத்தின் ஆயிரக் கொள்கைகள் உள்ளடக்கியதாகும் அவர்கள் மீது அல்லாஹ்வின் கருணை உண்டாகட்டும் இந்த ஆயிரக் கொள்கைகளை நான் அஷேக் பதறுள் இபாத் அவர்களிடமிருந்து கற்றேன் அதைத் தவிர,கண்ணியத்திற்குரிய ஷேக் அவர்கள் “ஃபிக்ஹ் அல்-துவாயியா மற்றும் *அல்-அஸ்கர்” என்ற நூலையும் எழுதியுள்ளார். ஷேக் பதருள் இபாத் அவர்கள் இந்த புத்தகத்தில் தெளிவாக அல்லாஹ் தஆலாவின் அனைத்து பெயர்களும் மற்றும் பண்புகளும் உண்மையில் “காரணங்கள்/Reasons” என்பதை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்,ஷேக் பதருல் இபாத் அவர்கள் அயத் அல்-குர்சியில் காணப்படும் பத்து “காரணங்களை/Reasons” விவரித்துள்ளார், மேலும் இந்த “காரணங்களை/Reasons” நிரூபித்துள்ளார்,
எடுத்துக்காட்டாக: அல்லாஹ் மட்டுமே உண்மையான இறைவன் , அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை,உயிருடன் இருப்பவனும் அனைத்தையும் தாங்குபவனும், அவனுக்கு உறக்கமும் கிடையாது உறங்குவதும் கிடையாது,வானங்கள் மற்றும் பூமியில் உள்ள அனைத்தும் அவனுடைய கட்டுப்பாட்டில் உள்ளது,அவனுடைய அனுமதியின்றி யார் அவன் முன் பரிந்து பேசுவது,அவனுக்கு முன்னால் இருப்பதையும் அவனுக்குப் பின்னால் இருப்பதையும்

அறிவான் மற்றும் அவனுடைய அறிவு இல்லாமல் எதையும் மறைக்க முடியாது, ஆனால் அவன் விரும்பும் அளவுக்கு, அவனுடைய நாற்காலியின் பரந்த தன்மை பூமியையும் வானத்தையும் சூழ்ந்துள்ளது, மேலும் அவற்றைப் பாதுகாப்பதில் அல்லாஹ் சோர்வடையவதில்லை,அவன் மிக உயர்ந்தவன் மற்றும் பெரியவன்.

(1) الله لا إله إلا هو
(2) الحي
(3) القيوم
(4) لا تأخذه سنة ولا نوم له
(5) له ما في السماوات وما في الأرض
(6) من ذا الذي يشفع عنده إلا بإذنه
(7) يعلم ما بين أيديهم وما خلفهم
(8) ولا يحيطون بشيء من علمه إلا بما شاء

இதற்குள் காரணங்கள் இருக்கின்றன(REASON'S)

(9) وسع كرسيه السماوات والأرض

(10)ولا يئوده حفظهما

(11)وهو العلي العظيم

*ஒரு முஸ்லிமல்லாத சகோதரர் என்னிடம் உங்கள் இறைவனின் பத்து "பண்புகளை" சொல்லுங்கள் அது வேறு யாரிடமும் இருக்கக் கூடாது என்று சொன்னபோது நான் அவர்களின் முன் 12 "பண்புகளை" வைத்தேன், எனவே அவர்கள் ஆச்சிரத்தில் ஆழ்ந்து விட்டார் பிறகு நான் இந்த முஸ்லீம் அல்லாத சகோதரரிடம் சொன்னேன் நம்முடைய சிறிய பிள்ளைகளுக்கும் இந்த "12 பண்புகளையும்" நன்றாக கற்பிக்கப்படுகிறது,பகல் மற்றும் இரவின் ஒவ்வொரு பகுதியிலும் காலையிலும் மாலையிலும் கூட, அனைத்து முஸ்லிம்களும், அவர்கள் சிறு குழந்தைகளாகவோ அல்லது சிறுமிகளாகவோ அல்லது வயதான ஆண்களாகவோ பெண்களாகவோ இருந்தாலும் எல்லோரும் அதை ஓதுகிறார்கள், எனவே அயத் அல்-குர்சி☹(أعظم آية في كتاب الله تعالى

இது அல்லாஹ்வின் புத்தகமாகிய திருமறைக் குர்ஆனின் மிகப் பெரிய சிறப்பு வாய்ந்த வசனம் மற்றும் மிகவும் மகிமை வாய்ந்தது என்று அழைக்கப்படுகிறது-

*முஸ்லிமல்லாத சகோதரருக்கு இந்த விஷயங்கள் எல்லாம் தெரிய வந்ததும், இந்த 12 “பண்புகளும்” மிகவும் “Powerful/சக்தி” வாய்ந்தவை” என்று சொன்னதோடு, இது உங்களுடையது இறைவன் மட்டுமல்லாமல் இவன் முழு பிரபஞ்சத்தின் இறைவன் ஆவான் என்று கூறினார் ,நான் “Zee Salam” இல் நான் சுமார் “30 Episodes” அதே தலைப்பின் கீழ், அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புக்கூறுகள் தொடர்பாக வழங்கினேன், எனவே அனைத்து “Non Muslims

முஸ்லிமல்லாதவர்கள்” இறைவனை அறியாமல் எங்கே எங்கு என்று பல இடத்தில் தேடினோம் விலங்குகள் மற்றும் கற்களில் இறைவனை தேடினோம் ஆனால் எல்லாப் பிரபஞ்சங்களுக்கும் இறைவன் ஒருவனே என்று விளங்கிக் கொண்டோம் என்று சகோதரர்கள் ஒரு மொழியில் சொன்னார்கள்.

*உயிருள்ள மற்றும் உயிரற்ற ஒவ்வொரு பொருளும் இந்த ஒரே இறைவனுக்கு சாட்சியாக இருக்கிறது அல்ஹம்துலில்லாஹ், எனவே அல்லாஹ் சுப்ஹானஹு வதாலாவின் ஆற்றலைப் புரிந்து கொள்ள ஒரு நபர் இஸ்லாத்தின் போதனைகளை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்,அல்லாஹ் தஆலாவின் மகத்துவத்தைப் முறையாக தெரிந்து கொள்வதன் மூலம் அவனை சரியாக பின்பற்ற முடியும்.

“அலகு எண்.1 இன் சில தலைப்புகள்”

•முன் சென்றச் சமூகத்தின் நிலைமை மற்றும் கோழைத்தனம்(243)

•அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் மற்றும் செலவு செய்பவர்களின் சிறப்பு (244-245)

•பனீ இஸ்ரவேலர்களின் நிலை மற்றும் தாலுத் மற்றும் ஜாலூத்தின் சம்பவம் (246-252)

•தூதர்களின் அந்தஸ்து மற்றும் மக்களின் வேறுபாடுகளின் ஞானத்தின் குறிப்பு (253)

•செலவுச் செய்தல் மற்றும் செலவு செய்யாதவர்களுக்கான மறுமை நாளின் அச்சுறுத்தலின் பண்புகள் (254)

•அயத் அல்-குர்ஸி குர்ஆனின் மிகப் பெரிய மகத்துவம் வாய்ந்த வசனம் (255)

•மார்க்கத்தில் எந்த வற்புறுத்தலும் இல்லை, ஆனால் யார் இதை வலிமையாக பிடித்துக் கொண்டார்களோ அது ஒருபோதும் உடையாத சங்கிலியை பிடித்துக் கொள்வது போன்றதாகும் (256)

•முஃமின்களின் நண்பன் அல்லாஹ் மற்றும் நிராகரிப்பவர்களின் நண்பன் ஷைத்தான் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் (257)

•நம்ரூத் மற்றும் நபி இப்ராஹிமின் நிகழ்வு(258)

•உஸைர் (அலைஹிஸ்ஸலாம்) அல்லாஹ்வினால் மரணம் கொடுக்கப்பட்டு நூறு வருடங்களுக்குப் பிறகு உயிர்த்தெழுப்பப்பட்ட கதை,அல்லாஹ்வினால் மீண்டும் உயிர்த்தெழு வைப்பதின் ஆற்றல் விவரிக்கப்பட்டுள்ளது (259).

•நபி இப்ராஹிம் அல்லாஹ்விடம் மரணம் மற்றும் வாழ்க்கையைப் பற்றிய கேள்வி மற்றும் அந்த நிகழ்வின் குறிப்பு (260)

*அலகு எண்: 2

•மூன்றாவது அத்தியாயத்தின் இரண்டாவது அலகு சூரா அல்-பகராவின் 262 முதல் 273 வரையிலான வசனங்களைக் கொண்டுள்ளது,இந்த வசனங்களில் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தல் மற்றும் தான தர்மத்தை பற்றிய குறிப்பு உள்ளது .

•இதற்கு முன்பான அலகில் நாம் பனீ இஸ்ரவேல மக்கள் மரண பயத்தாலும் கொல்லப்படுவதின் அச்சத்தாலும் இருந்தார்கள் அதாவது அவர்களுக்கு அல்லாஹ்வின் பாதையில் செல்வங்கள் செலவு செய்வதால் குறைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது ஆனால் அவர்களுடைய செல்வங்கள் குறைவது கிடையாது அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் எவ்வளவு தாரதர்மம் செய்வார்களோ

அல்லாஹ் அவருடைய செல்வங்களை அதிகப்படுத்துவான் இது அல்லாஹ்வுடைய வாக்குறுதி இந்த அலகில் தான தர்மங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது சிலர் செல்வத்தை மிகவும் நேசிக்கிறார்கள் தான தர்மங்கள் செய்வதிலிருந்து தன்னை தடுத்துக் கொள்கிறார்கள்,சிலர் மக்கள் தன்னை புகழ வேண்டும் என்பதற்காக தான தர்மம் செய்கிறார்கள்,ஆனால் யாருடைய எண்ணம் இவ்வாறு இருக்கிறதோ பிறரும் மனம் திறந்து தானம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மக்கள் மத்தியில் “Awareness/விழிப்புணர்வு” ஏற்படுத்துவதற்காக வெளிப்படையாக செய்வார்களோ அது வெளிக்காட்டுதலில் வராது அது கூடும் மாறாக இந்த ஹதீஸின் உதாரணம் என்று கூறப்படும் இன்ஷா அல்லாஹ் انما الاعمال

بالنيا ت புகாரி 1)

“அலகு எண்.2 இன் சில தலைப்புகள்”

•அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்பவர்களின் உதாரணமும் செலவு செய்வதின் விளக்கமும் (261-267)

•அல்லாஹ்வின் வாக்குறுதிக்கும் ஷைத்தானின் வாக்குறுதிக்கும் இடையிலான ஒப்பீடு (268-269)

•ஜஹ்ரி மற்றும் சிர்ரி தர்மம் மற்றும் அவற்றின் வெகுமதியின் குறிப்பு (270-271)

*அலகு எண். 3

•சூரா அல்-பகராவின் மூன்றாவது பகுதியின் மூன்றாவது அலகின், வசனங்கள் 274 முதல் 283 வரை, ஹராமான முறையில் சம்பாதிப்பது மற்றும் வட்டி கொடுத்து சம்பாதிப்பதை தடை செய்யப்பட்டிருக்கின்றது மேலும் எழுதுவதில் உள்ள சிக்கல்களும் இந்த பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன, அதாவது பரிவர்த்தனைகளைக் கையாளும் போது எழுதுவது ஊக்குவிக்கப்படுகிறது,இந்த அலகில் அடமானம் பற்றிய விளக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளன,இந்த அலகின் அடிப்பகுதி என்னவென்றால், அல்லாஹ்வின் பாதையில் பரிவர்த்தனை அல்லது ஏதாவது இழப்பீடு அல்லது நன்மை இல்லாமல் கொடுக்கப்பட்டால்

அது நல்லது, அதில் வட்டி இருந்தால் அது ஆகுமானது அல்ல குறிப்பாக வட்டியை இஸ்லாம் தடை செய்துள்ளது.

“அலகு எண்.3 இன் சில தலைப்புகள்”

•தர்மத்தைப் பெற தகுதியானவர்கள் மற்றும் அதைச் செலவிடுபவர்களின் வெகுமதியின் விளக்கம்

(272-274).

•வட்டியின் பாதிப்பு மற்றும் சமூகம் மற்றும் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் தீமைகள் (275-281)

*அலகு எண்: 4

•சூரா அல்-பகராவின் மூன்றாவது அத்தியாயத்தின் நான்காவது அலகின் 284 ஆம் வசனம் முதல் வசனம் 286 வரை வட்டி தடைசெய்யப்பட்டுள்ளது,மேலும் சரியான மற்றும் ஹலாலான செல்வத்திலிருந்து அல்லாஹ்வின் பாதையில் செலவழிக்க வலியுறுத்தப்படுகிறது, மேலும் இது இறையச்சம் மற்றும் பாதுகாப்பின் அடையாளம் என்று கூறப்பட்டுள்ளது, நம்பிக்கை, இபாதத் மற்றும் விவகாரங்களில் இறையச்சத்துடன் மற்றும் “Discipline/ஒழுக்கத்துடன்” வாழ வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது,அனைத்து அகற்றலுக்கும் சொந்தக்காரன் அல்லாஹ் ஒருவனே ஆவான், இமானியாத் என்று இரண்டு பெரிய வசனங்களுடன் முடிவடையும், சாமிஃன வஃதனாவின் முக்கியத்துவம்,அல்லாஹ்வின் கருணை மனிதனுக்கு அவனது சக்திக்கு ஏற்ப கட்டளைகளை பிறப்பித்துள்ளான்,இறுதியில் பாவ மன்னிப்பு மற்றும் பிரார்த்தனையின் வார்த்தைகளில் சூரா அல்-பகரா முடிவடைகிறது.

“அலகு எண்.4 இன் சில தலைப்புகள்”

•கடன்,சாட்சியம் மற்றும் அடமானத்தின் பற்றிய விளக்கங்கள் (282-283)

•அல்லாஹ்வின் அறிவும் அவனுடைய சக்தியும் அனைத்தையும் உள்ளடக்கியது (284)

•தூதர்கள் மற்றும் நம்பிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர்கள் அல்லாஹ்விடம் திரும்புதல் பற்றிய குறிப்பு (285-286)

*விளக்கவுரை:

•சூரா பகரா மற்றும் சூரா ஆல இம்ரானின் பொதுவான கருப்பொருள் “நபித்துவத்தை உறுதிப்படுத்துதல்” என்பதாகும்.

•சூரத்துல் ஃபாத்திஹாவில் அல்லாஹ்வின் புகழும் ஆனால் அடுத்த சூராக்களான பகரா மற்றும் ஆல இம்ரானில் “நபித்துவத்தின் உறுதிமொழி” இருக்கிறது.

•அல் மக்தூப்-இது சூரா அல்-பகரா மற்றும் சூரா அன்-நிஸாவில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

•சாலின்-இது சூரா ஆல-இம்ரான் மற்றும் சூரா அல்-மாயிதாவில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

•இஃதினா-பிரார்த்தனை கேட்கப்பட்டது,”ஹாதி வின்னாஸ் “பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.”

•இந்த சூராவின் ஆரம்பத்தில் விரிவான நம்பிக்கை (2:3), நடுப்பகுதியும் விரிவான நம்பிக்கை (2:136) மற்றும் முடிவும் விரிவான நம்பிக்கையுடன் முடிவு செய்யப்பட்டுள்ளது (2:285)

•••••••••••••••••••••••••••••••••••

••சூரா ஆல-இம்ரான்••

அத்தியாம் எண்:3

“அருளப்பட்ட இடம்”

•இந்த சூரா மதீனாவில் இறக்கப்பட்டது!!

•அலகு எண்:5

••சூரா ஆல இம்ரான் மூன்றாவது அத்தியாயத்தின் ஐந்தாவது அலகுடன் தொடங்குகிறது மற்றும் இந்த அலகு சூரா ஆல இம்ரானின் 1 முதல் 9 வரையிலான வசனங்களைக் கொண்டுள்ளது, ஆல இம்ரானுக்கு ஒரு அறிமுகம் வழங்கப்பட்டுள்ளது”Preface”, இந்த அலகில் இம்ரானுடைய பரம்பரைப் பற்றிப் கூறப்பட்டுள்ளது ஆல இம்ரானுடைய பரம்பரை நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) மரியம் (அலைஹிஸ்ஸலாம்) நபி இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) வரை செல்கிறது,அவர்களுடைய பரம்பரையை குறிப்பிட்டதற்கு பிறகு நீங்கள் உங்களுடைய பெரிய பரம்பரங்களை கவனிப்பதில்லை மாறாக கிறிஸ்தவர்களை நோக்கி கூறப்பட்டது நீங்கள் “ஈஸா இப்னு மரியம்” அல்லாஹ்வுடைய மகன் என்று அழைத்தீர்கள்” உண்மையில் இந்த நம்பிக்கை அல்லாஹ்வின் கோபத்தை வர வைப்பதற்கு சமம், மேலும் இந்த அலகில் தோவ்ராத் மற்றும் இன்ஜீல் அருளப்பட்டதை குறிப்பிட்டப்பட்டுள்ளது,அறிஞர்களால் ஒப்புமையின் ஏழு விதமான அர்த்தங்கள் கூறப்பட்டுள்ளது மேலும் இந்த பிரார்த்தனை கற்பிக்கப்பட்டுள்ளது:

(رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِن لَّدُنكَ رَحْمَةً)

எங்கள் இறைவா, நீ எங்களுக்கு நேர்வழி காட்டு, உனது கருணையை எங்களுக்கு வழங்கிய பிறகு எங்கள் இதயங்களை கடினமாக்காதே, நிச்சயமாக நீயே நேர்வழி காட்டுபவன், எங்கள் இறைவா! நிச்சயமாக,

நீ தான் அந்த நாளில் அனைத்து மக்களையும் ஒன்று சேர்ப்பாய், அதில் எந்த சந்தேகமும் இல்லை, நிச்சயமாக, அல்லாஹ் தனது வாக்குறுதியை மீறுவதில்லை.

*அலகு எண்.5 இன் தலைப்புகள்:

•குர்ஆன்,தோராத் மற்றும் இன்ஜீல் ஆகியவை அல்லாஹ்வினால் அருளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துதல் (1-4)

•அல்லாஹ்வின் ஆற்றலுக்கான சான்றுகள் மற்றும் அவனது ஏகத்துவத்தின் குறிப்பு (5-6)

•குர்ஆனில் வலுவான மற்றும் ஒத்த வசனங்கள் உள்ளன, மேலும் மக்கள் இதில் இரண்டு பிளவுகளாக பிரிந்துள்ளனர் (7)

•ரஸாக்கின் அல்லாஹ்வின் பக்கம் திரும்புதல் பற்றிய குறிப்பு (8-9)

*அலகு எண்: 6

•சூரா ஆல இம்ரானின் இரண்டாவது அத்தியாயத்தின் வசன எண் 10 முதல் 18 வரை சூரா ஆல இம்ரானின் இரண்டாவது செய்தி கூறப்பட்டுள்ளது மற்றும் “கிறிஸ்துவர்கள்/Christians” அவர்களுக்கு புரிய வைக்கப்படுகிறது அல்லாஹ்வுக்கு இணைவைக்காதீர்கள் மற்றும் குஃப்ருடைய பாதையை பின்பற்றாதீர்கள் மற்றும் இதுவும் கூறப்பட்டது உங்களுக்கு முன் சென்ற ஃபிர்அவ்னும் ஃபிர்அவ்னின் குடும்பமும் இணைவைத்தல் மற்றும் குஃபூருடைய பாதையை பின்பற்றினார்கள் அதனால் அவர்கள் இவ்வுலகிலிருந்து அழிக்கப்பட்டனர்,மேலும் இதே நிலைமை குஃப்பாரே குரைஷுடன் நடந்தது அவர்கள் பத்ர் போரில் அழிந்தனர் அதனால் அவர்கள் நரகத்தில் தள்ளப்பட்டார்கள்,எனவே புத்தகம் வழங்கப்பட்ட மக்கள் எச்சரிக்கப்பட்டனர் மேலும் அறிவுரையும் வழங்கப்பட்டது இருந்தபோதிலும் இன்னும் புத்தகம் வழங்கப்பட்டவர்கள் பெரும்பான்மையானவர்கள் தவறான பாதையில் சென்றனர்,அதன் பிறகு வழிகாட்டுதலைப் பின்பற்றாதவர்களின் “மூன்று காரணங்கள்/Reasons” குறிப்பிடப்பட்டுள்ளன, இவை மூன்று

“Reasons/காரணங்கள்” ஆகும், அவை நேரான பாதையில் செல்வதற்கு தடையாக அமைகிறது,அந்த தடைகள் பின்வருமாறு.

(1)சந்தேகங்கள்: இஸ்லாமைப் பற்றியச் சந்தேகங்கள் தவிர்க்கப்பட வேண்டும், சந்தேகங்களைக் கல்வியினால் மட்டுமே குணப்படுத்த முடியும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்,மார்க்க கல்வி அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் மார்க்க அறிஞர்களை மதிக்க வேண்டும் ஏனெனில் புத்தகம்,சுன்னா மற்றும் நபித் தோழர்களின் புரிதலின் வெளிச்சத்தில், அறிஞர்கள் மட்டுமே நமது சந்தேகங்களைத் தீர்க்க ஒரே வழி.

2.காம ஆசைகள்,சிதறிய எண்ணங்கள், சிற்றின்பம் மற்றும் அதன் தவறான வழிகளால், பலர் வாழ்க்கையை வெறுக்கிறார்கள், அவை அனைத்தும் நல்ல செயல்களாலும்,நன்மை பயக்கும் கல்வியால் மட்டுமே குணமாகும், அதாவது நல்ல அமல்களைச் செய்யக்கூடியவர்கள் மற்றும் நேர்மையானவர்களுடன் பழக வேண்டும், அறிஞர்களின் சகவாசத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் மற்றும் மார்க்க கல்வியைத் தெரிந்து கொள்ள வேண்டும் இதன் மூலமாக காமத்தின் ஆசையை அழிக்க முடியும்.

3.மறுமையைப் பற்றி சிந்தித்தல்/மறுமையின் எண்ணம்: எந்த மக்களுடைய மறுமைச் சிந்தனை பலவீனமாக இருக்குமோ அந்த

மக்கள் ஹலால் மற்றும் ஹராம் என்ற வித்தியாசத்தை முற்றிலுமாக மறந்து விடுகின்றனர் இதனால் அவர்கள் வழிதவறிச் செல்கிறார்கள் எனவே மறுமை பற்றிய எண்ணமும் மறுமைப் பற்றியச் சிந்தனையும் எப்போதும் புத்துணர்ச்சியாகவே வைத்துக் கொள்ள வேண்டும்,சில அறிஞர்கள் இங்கு வரை கூறியுள்ளார்கள் மறுமையின் எண்ணம் இல்லாவிட்டால் தவ்ஹீத் போன்ற மகத்துவம் வாய்ந்த அருட்கொடையும் எந்த பலனும் அளிக்காது.

“அலகு எண்.6 இன் சில தலைப்புகள்”

•இறை-மறுப்பாளர்களின் முடிவு (10-13)

•மக்கள் ஆசைகளால் ஏமாறப்படுவதும் மற்றும் உலக ஆசைகளின் வகைகள் மற்றும் விசுவாசிகளை சிறந்தவற்றின் பக்கம் அழைப்பது (14-17)

*அலகு எண்: 7

*ஆறாவது பிரிவில், கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஒரு தலைப்பு போடப்பட்டுள்ளது, இந்த பிரிவில்,சூரா ஆல-இம்ரானில் 19 முதல் 32 வரையிலான வசனங்களில் இஸ்லாத்தின் மகத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் உம்மத்தே முஹம்மதியாயுடைய இமாமத் மற்றும் தலைமைத்துவத்துலம் கொடுக்கப்பட்ட காரணங்கள் குறிப்புக்கப்பட்டுள்ளன மற்றும் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடமிருந்து தலைமைப் பதவி பறிக்கப்பட்டதற்கான காரணங்களும் கூறப்பட்டுள்ளன,இவற்றில் காரணங்களில் சந்தேகங்கள் மற்றும் இச்சைகள் ஆகியவையும் ஒரு காரணமாக கூறப்பட்டுள்ளன,மேலும் இந்த அலகில் யூத மற்றும் கிறிஸ்தவர்கள் இணையான வசனங்களை மட்டும் பின் தொடர்ந்தனர் மற்றும் அதிகாரபூர்வமான வசனங்களை அதாவது தெளிவாக காணப்படுகின்ற வசனங்களை அவர்கள் விட்டுவிட்டு வழிதவறிச் சென்றனர் எனவே முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தார்களுக்கு ஆதாரப்பூர்வமானவற்றின் பக்கம் முன்னோக்கிச் சென்று இஸ்லாத்தின் சரியான கருத்தை நிலைநிறுத்த வலியுறுத்தப்படுகிறது,இஸ்லாத்தின் சரியான கருத்தை நிறுவுங்கள்,இஸ்லாத்தின் பாதையை மாற்றுவதை விட்டு இஸ்லாத்தை இலக்கை சரியான முறையில் மக்களிடம் வையுங்கள் இந்தப் பாதையை யார் கடைபிடிப்பார்களோ அவர்களின் கால்களை வெற்றிகள் முத்தமிடும்.

“அலகு எண்.5 இன் சில தலைப்புகள்”

•அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல், இஸ்லாம் என்ற மார்க்கம் மட்டுமே அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுதல்,வேத கொடுக்கப்பட்டவர்கள் மீது

சான்றுகள் முதலியவற்றை நிறைவு செய்தல் பற்றிய குறிப்பு (18-20)

•காஃபிர்கள் நபிமார்களை மற்றும் நல்லவர்களை கொலை செய்தல் அதற்கான தண்டனைப் பற்றிய குறிப்பு (21-22)

•புத்தகம் வழங்கப்பட்ட மக்களின் இயல்பு மற்றும் எச்சரிக்கை (23-25)

•எல்லாவற்றிலும் அல்லாஹ்வின் ஆற்றலைக் குறிப்பிடுதல் (26-27)

•நிராகரிப்பவர்களுடனான தொடர்புகள் மற்றும் மறுமையின் தண்டனையை எச்சரித்தல் (28-30)

•கீழ்ப்படிதலுள்ள முஃமின்களின் வெகுமதி அல்லாஹ்வின் அன்பாகும் (31-32)

*அலகு எண்: 8

•அல்லாஹ்வுடைய தூதர் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் சூரா ஆல இம்ரானின் 33 முதல் 44 வரையிலான வசனங்களுக்கு இடையில் குறிப்பிடப்பட்டுள்ளது அதைத் தொடர்ந்து இதைப் புரிய வைப்பதற்காக உதாரணம் கூறப்பட்டுள்ளது எல்லா மனித இனத்திற்கும் மூதாதையர் நபி ஆதம்(அலை) அவர்கள் [தந்தையாக] உள்ளார் மற்றும் நபி நூஃஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை ஆதமே சகிர் என்றும் அழைக்கப்பட்டார்,மேலும் நபி இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) அபுல் அன்பியா என்று அழைக்கப்பட்டார், ஏனென்றால் நபி இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்)

பனு இஸ்ராயில் மற்றும் பனு இஸ்மாயில் என்று அழைக்கப்படுகிறார், மேலும் பெரும்பாலான நபிமார்கள் பனீ இஸ்ரவேலர்களிருந்து வந்தனர், எனவே முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பின்பற்றுதலுக்கு பிறகு இந்த மூவருடைய (ஆதம் அலைஹிஸ்ஸலாம்), நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் நபி இப்ராஹிமைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் பிறகு ஆல இம்ரானைக் குறிப்பிட்டு மேலும் நசாராக்கள் பரம்பரையில் இம்ரானின் குடும்பம் இருப்பதாகவும், இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) உங்கள் மூதாதையர் என்றும், அதன் பிறகு நூஹ் அலைஹிஸ்ஸலாம் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய நினைவூட்டப்பட்டுள்ளது அதன் பிறகு அவரிடம் கேட்கப்பட்டது,பிறகு எந்த அடிப்படையில் "இப்னு அல்லாஹ்" என்ற நம்பிக்கையை நீங்கள் கண்டுபிடித்தீர்கள்?

•அதன் பிறகு எச்சரிக்கையும் விடப்பட்டது இந்த நம்பிக்கையிலிருந்து விலகி இருக்குமாறு கூறப்பட்டுள்ளது,மேலும் படைப்பினங்களின் படைப்பின் உதாரணங்கள் விவரிக்கப்பட்டுள்ளது மேலும் ஜகரியா (அலைஹிஸ்ஸலாம்) பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பிறப்பும் விவரிக்கப்பட்டுள்ளது,எப்படி நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைத் தாய் தந்தை இல்லாமல் அல்லாஹ் படைத்தானோ எப்படி இது கடினமான காரியம் கிடையாதோ மேலும் இதன் மூலமாக நபி ஈசாவை தந்தை இல்லாமல் படைத்ததை விளக்கியுள்ளான் பிறகு அற்புதங்களை விளக்கியுள்ளான், இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஆற்றல் மற்றும் அல்லாஹ்வின் அடையாளங்கள் ஆகும், எனவே கிறிஸ்தவர்கள் அல்லாஹ்வின் ஆற்றலை ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) "அல்லாஹ்வின் மகன்" என்ற கூறி கிறிஸ்தவர்கள் அல்லாஹ்வின் அற்புதங்களையும் வெளிப்பாடுகளையும் வேறு அர்த்தத்தில் விளக்கத் தொடங்கினர் அதனால் அவர்கள் வழித் தவறிச் சென்றனர் எனவே அவர்கள் தங்கும் இடத்தை நரகத்தில் ஆக்கிக் கொண்டார்கள்.

"அலகு எண்.8 இன் சில தலைப்புகள்"

•சில நபிமார்களின் வரலாறுகள்,குறிப்பாக மர்யம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது (33-37)

•ஜகரியா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாறு (38-41)

•ஈசா (அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பண்புகள் மற்றும் அற்புதங்களைப் பற்றிய விளக்கம் (42-51)

*அலகு எண்: 9

•மூன்றாவது பிரிவின் ஒன்பதாவது அலகில், சூரா ஆல இம்ரான், வசனம் 45 முதல் 63 வரை, நபி ஈசா அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அற்புதங்கள் விளக்கப்பட்டுள்ளது, நபி ஈசா எப்படி குழந்தையாக இருக்கும் போது பேசினார் மற்றும் மர்யம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் கற்புக்கு சாட்சியாக இருந்தார் மேலும் அவர்கள் வானத்தில் உயிருடன் உயர்த்தப்படுவார்கள், பின்னர் நியாயத்தீர்ப்பு நாளுக்கு அருகில் நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) வெளிப்படுத்தப்படுவார்,சிலர் நபி ஈசா இறந்துவிட்டார் என்று கூறுகின்றனர் இந்த செய்தியை நான் ஒரு ஆராய்ச்சி வீடியோ வடிவத்திலும் (YouTube)யில் வெளியிட்டுள்ளேன்.

அதனுடைய தலைப்பு:

“Jesus is alive,never dead”

•இதில் நான் திருக்குர்ஆன் மற்றும் பகுத்தறிவு வாதங்கள் மற்றும் பைபிளில் இருந்து “52 Reasons” பற்றி விளக்கி உள்ளேன் திருக்குர்ஆனில் இருந்து 10 வசனங்களை முன்வைத்து சுமார் 23 பகுத்தறிவு காரணங்களை முன்வைத்துள்ளேன்,இது அரபு, ஆங்கிலம் மற்றும் உருது ஆகிய மூன்று மொழிகளில் கிடைக்கிறது,இன்ஷா அல்லாஹ் நீங்களும் இதன் மூலம் பயனடையலாம்.

•இந்த பிரிவின் முக்கிய தலைப்பு முபாஹ்லா ஆகும் நஜ்ரான்னுடைய கிறிஸ்தவர்களிடம் கூறப்பட்டது நீங்கள் உங்கள் குடும்பத்தை அழைத்து வந்து முபாஹ்லா செய்யுங்கள் என்று கூறப்பட்டது முபாஹ்லாவுக்கு வந்த கிறிஸ்தவர்கள் ஓடிவிட்டனர் ஏனென்றால் அவர்களுக்கு அதனுடைய முடிவு தெரியும் மற்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையான நபி மற்றும் ரசூல் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர் அதனால் தான் அவர்கள் முபாஹ்லாவிலிருந்து விலகினர்.

“அலகு எண்.9 இன் சில தலைப்புகள்”

•(42-51) நபி ஈசா அலைஹிஸ்ஸலாமின் பண்புகள் மற்றும் அவரது அற்புதங்களைப் பற்றிய விளக்கம்.

•(52-53) ஹவ்வாரியின்களின் நிலைப்பாடும் மற்றும் அவர்கள் நபி ஈசாவுக்கு உதவுதலும்.

•(54-58) யூதர்களின் சதி நபி ஈசாவை பற்றி,அல்லாஹ்வால் நபி ஈஸாவை வானத்தில் எடுத்துக் கொள்ளுதல் மற்றும் மறுமை நாளின் தீர்ப்பும்.

•(59-64) நபி ஈஸாவை மனிதனாக ஏற்க மறுப்பவர்களுக்கான மறுப்பு.

*அலகு எண்: 10

•மூன்றாவது பிரிவின் பத்தாவது அலகு சூரா அல-இம்ரானின் 64 முதல் 92 வரையிலான வசனங்களைக் கொண்டுள்ளது, இங்கு நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் தவறான நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அவற்றில் ஒன்று மக்சூப் மற்றொன்று ஸாலீன் இந்த இரண்டு குழுக்களும் இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) மீது பல

நம்பிக்கைகளைக் புகுத்தினர்,அதே சமயம் நபி இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நம்பிக்கை (ஹனீஃப்) மற்றும் அவர் ஒரு முஸ்லீம் என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது,

அதற்குப் பிறகு நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) காலத்தில் காணப்பட்ட யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் அதாவது அஹ்லே கிதாப் அவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை  எவ்வாறு துன்புறுத்தினார்கள், எப்பொழுதும் குறும்புகளில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது,அதன் பிறகு சூரா ஆல இம்ரான் வசனம் எண் 83 குறிப்பிடப்பட்டுள்ளது, இந்த வசனத்தில் அனைத்து நபிமார்களிடமிருந்து வாக்குறுதி பெறப்பட்டது முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வந்தால் நீங்கள்  அவரைப் பின்பற்ற வேண்டும் இது அல்லாஹ்வுடைய தூதருடைய கண்ணியமாகும் இதை குர்ஆன் விவரித்துள்ளது.

“அலகு எண்.10ன் சில தலைப்புகள்”

•இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை யூதர் அல்லது கிறிஸ்தவர் என்று அழைப்பவர்களின் கூற்றுகளை மறுப்பது (65-68)

•முஸ்லிம்களுக்கு எதிராக புத்தகக் கொடுக்கப்பட்டவர்களின் சதி,அவர்கள் இவர்களை நேர்வழிக்குப் பிறகு வழித்தவரச் செய்ய விரும்புகின்றனர் (69-74)

•புத்தகம் கொடுக்கப்பட்டவர்களின் குணாதிசயங்கள் பற்றிய விளக்கம் மற்றும் அவர்களுக்கான கடுமையான எச்சரிக்கை (75-78)

•நபிமார்கள் மீது புத்தகம் கொடுக்கப்பட்டவர்களின் அவதூறு மற்றும் அவர்களின் மறுப்பு (79-80)

•நபிமார்களிடம் உறுதிமொழி வாங்கப்பட்டது நபி முஹம்மத்(ஸல்) அவர்களை நம்பிக்கை கொள்வார்கள், இருந்தபோதிலும் வேதம்

கொடுக்கப்பட்டவர்கள் அதை மறுத்தார்கள் மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தைத் தவிர எந்த மார்க்கமும் அங்கீகரிக்கப்படாது என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது (81-85)

•கல்வி இருந்தும் வழிதவறிச் செல்பவர் நேர்வழி பெறுவார் என்று எதிர்பார்க்க முடியாது மற்றும் அவர்களுடைய தண்டனையின் குறிப்பு (86-89)

•அவநம்பிக்கையின் வகைகள் (90-91)

•தனக்கு விருப்பமான பொருளைச் செலவு செய்வதன் மூலம் நல்லதைப் பெறுவதுப் பற்றியக் குறிப்பு (92)

••••••••••••••••••••••••••••••••

••“லன் தனாலு”••

••நான்காவது அத்தியாயம் பற்றிய சுருக்கமான அறிமுகம்.

"அத்தியாயம் எண். 4"

•அறிஞர்கள் நான்காவது அத்தியாயத்தை "15 அலகுகளாக” பிரித்துள்ளார்கள், இந்த அத்தியாயம்"லன் தனாலு" என்று அழைக்கப்படுகிறது, அதாவது "லன் தனலுலிருந்து நான்காவது அத்தியாயத்தின் தொடக்கமாகும்.

•நான்காவது அத்தியாயத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்: முதல் பகுதி சூரா ஆல-இம்ரானின் வசனங்கள் 1 முதல் 13 வரை அலகுகளைக் கொண்டுள்ளது மற்றும் அலகு எண்: 14 மற்றும் 15 இன் இரண்டாம் பகுதி சூரா அன்-நிஸாவின் தொடக்க வசனங்களைக் கொண்டுள்ளது.

*அலகுகளின் விநியோகம் பின்வருமாறு:

•அத்தியாயம் எண் 4 "லன் தனாலு" இன் வசனங்கள் மற்றும் பாடங்களின் பிரிவுகள் அலகுகளால்!

அலகுகள்

வசனங்கள்

பாடங்கள்

•அலகு எண்: 1

92-99 மில்லத் தே இப்ராஹீமின் சிறப்புகள் மற்றும் தக்லீது செய்தல் மற்றும் சார்பு தடைசெய்யப்பட்டுள்ளது.

•அலகு எண்: 2

100-109 முந்தைய சமுதாயத்தின் தவறுகளுக்கு எதிரான எச்சரிக்கை மற்றும் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிக்கொள்ளுங்கள் என்ற அறிவுரையைக் குறிப்பீடு.

•அலகு எண்: 3

110-115 உம்மதே முஹம்மதிய்யாவிற்க்கு சிறந்த உம்மத் என்ற பெருமை வழங்கப்பட்டது.

•அலகு எண்: 4

116-120 காஃபிர்,முஷ்ரிக் மற்றும் நயவஞ்சகர்களுடனான இஸ்லாமிய எதிரிகளிடம் உறவின் போது கையாண்டலின் முறை.

•அலகு எண்: 5

121-129 பஃத்ர் போர் மற்றும் உஃஹதுப் போர் பற்றியக் குறிப்பு.

•அலகு எண்: 6

130-138 கீழ்ப்படிதலின் முக்கியத்துவமும் மற்றும் அதன் சிறப்பும் மற்றும் பர்கத்துடைய குறிப்பு,வட்டிப் பரிவர்த்தனைகள், சொர்க்கத்தின் பண்புகள்

மற்றும் சொர்க்கவாசிகளின் பண்புகள்,பாவமன்னிப்பு கோருதல் பற்றிய குறிப்பு.

•அலகு எண்: 7

139-148 முஸ்லிம்களுக்கு அனுதாபங்கள், உஹதுப் போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு நற்செய்தி,ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் பற்றிய குறிப்பு.

•அலகு எண்: 8

149-158 முஸ்லீம் ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொள்ளாமல் இருப்பதின் குறிப்பு மற்றும் தவறான (افكار) எண்ணங்கள் ஆகியவை இந்த பிரிவில் குறிக்கப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன.

•அலகு எண்: 9

159-164 ஆலோசனை மற்றும் பரஸ்பர ஆலோசனைச் செய்வதின் முக்கியத்துவம் பற்றிய குறிப்பு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்மாதிரி பற்றிய குறிப்பு மற்றும் ஏமாற்றுபவர்களுக்கு எதிரான கடுமையான எச்சரிக்கைக் குறிப்பு.

•அலகு எண்: 10

165-179 கஸ்வத் மூலம் உண்மையான விசுவாசிகளும் நயவஞ்சகர்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளார்கள்,மேலும் இது கூறப்பட்டுள்ளது நயவஞ்சகர்கள் ஒருபோதும்

இமானின் சுவையை சுவைக்க மாட்டார்கள்.

•அலகு எண்: 11

180-189 கஞ்சத்தனத்தை விட்டு தவிர்த்து இருக்க முஸ்லிம்களுக்கு அறிவுரைக் குறிப்பு.

•அலகு எண்: 12

190-195 அல்லாஹ் தஆலாவின் அடையாளங்களைக் கவனம் செலுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, மேலும் ஒருவர் பிரார்த்தனைச் செய்தால் அவரது பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

•அலகு எண்: 13

196-200 சூரா ஆல-இம்ரானின் இறுதி வசனங்களில், அல்லாஹ் நல்ல மற்றும் நேர்மையான மக்களைப் புகழ்ந்து அவர்களுக்கு வெற்றியின் நற்செய்தியை வழங்குகின்றான்.

••(சூரா அன்-நிஸா)••

•1-18 மனித உறவுகளின் விளக்கம்,குறிப்பாக திருமண வாழ்க்கையின் அன்பு மற்றும் பாசம், அனாதைகளின் சொத்துக்கள் மற்றும் அவர்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய விளக்கம்.

•19-23 திருமணங்களின் எண்ணிக்கை, சொத்து விநியோகப் பற்றியக் குறிப்பு,

முஹர்ரம் மற்றும் முஹர்ரம் அல்லாத பெண்களின் விவரிப்பு மற்றும் குறிப்பு.

*அலகு எண்: 1

•நான்காவதாக,சூரா ஆல-இம்ரானின் முதல் அலகில் 93 முதல் 99 வரையிலான வசனத்தில் இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) முஸ்லிம்களுடன் தொடர்புடையவர் என்றும், புத்தகம் கொடுக்கப்பட்ட மக்கள் பெயருக்காக நபி இப்ராஹிமுடன் தங்களை இணைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள் புத்தகம் கொடுக்கப்பட்ட மக்களுக்கு மில்லத்-தே-

இப்ராஹிம் மற்றும் தீனே ஹனிஃப்பிற்க்கு சிறிதும் சம்பந்தம் இல்லாதவர்கள், தினே ஹனிஃப் மார்க்கத்தை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் உம்மத்தே முஹம்மதிய மற்றும் முஸ்லிம்கள் ஆவார்கள்,மேலும் புத்தகம் கொடுக்கப்பட்ட மக்கள் தங்கள் அறிஞர்களை கடவுளாக ஆக்கிக் கொண்டார்கள்,அவர்கள் எதையெல்லாம் ஹலால் என்று அறிவிக்கிறார்களோ அது அவர்களிடம் ஹலாலாகக் காணப்படுகிறது,அதைப்போல் அவர்கள் எதையெல்லாம் ஹராம் என்று கூறுவார்களோ அதை அவர்கள் ஹராம் ஆக்கிக் கொள்வார்கள், அல்லாஹுத்தஆலா அருளிய ஹலால் மற்றும் ஹராமின் முறையின் கட்டளைகளை ஏற்கனவே அவர்கள் முடித்துவிட்டனர்,அவர்கள் தங்களுடைய முன்னோர்களுடைய நடைமுறையைப் பின்பற்றி வருகிறார்கள் அதே நேரத்தில் இவை அனைத்தும் புனித குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் தடைசெய்யப்பட்டுள்ளன,மேலும் தக்லீத் செய்வதைக் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது,பொது அறிஞர்கள் தக்லித் மற்றும் மத சார்புகளைக் கடுமையாக விமர்சித்து ஆதாரத்துடைய புத்தகத்தையும் சுன்னாவையும் பின்பற்றுவது வலியுறுத்தப்படுகிறது.

"அலகு எண்.1 இன் சில தலைப்புகள்"

•இஸ்ரேல் (யாகூப் அலைஹிஸ்ஸலாம்) சில விஷயங்களைத் தனக்கு தானே தடை செய்திருந்தார்கள் மற்றும் இவரைத் தொடர்புடைய யூத நம்பிக்கைகளின் மறுப்பு (93-95)

•பைத்துல்லாஹ்வின் அந்தஸ்து மற்றும் ஹஜ் கடமைப் பற்றிய விளக்கம் (96-97)

•வேதக்காரர்களின் அவநம்பிக்கை மற்றும் அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் இருந்து தடுப்பதின் மறுப்பு (98-99)

*அலகு எண்: 2

•சூரா ஆல-இம்ரானின் நான்காவது அத்தியாயம், வசனம் 100 முதல் 109 வரை, முந்தைய சமுதாயத்தின் தவறுகளைப் பற்றி

எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

•வேதம் கொடுக்கப்பட்டவர்களில் இறை நம்பிக்கையின்மையில் நிலைத்திருந்தவர்களின் தவறுகளைப் பின்பற்ற வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது,மேலும் அவர்கள் ஒன்றாக வாழவும்,அதாவது அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் ஒருவருக் கொருவர் பிரிவாக பிரிந்து விட வேண்டாம்.

"அலகு எண்.2 இன் சில தலைப்புகள்"

•நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரை அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிக் கொண்டு நன்மையை ஏவுங்கள் தீமைகளை தடுங்கள் என்ற கட்டளைப் பற்றிய குறிப்பு மற்றும் சிறந்த உம்மத்தின் கூற்று போன்றவைகள் (100-110)

*அலகு எண்:3

•சூரா ஆல-இம்ரானில்,வசனம் 110 முதல் 115 வரை,முஹம்மத்(ஸல்) அவர்களின் உம்மத் சிறந்தது சமுதாயம் என்று கூறப்பட்டுள்ளது ஏனென்றால் பெரும்பாலான மக்களை நன்மையின் பக்கம் ஏவி தீமையின் பக்கம் இருந்து தடுக்கிறார்கள் உம்மதே முஹம்மதியாவிற்கு கிடைத்த இந்த சிறப்பு வேறொரு சமூகத்திற்கு கிடைக்கவில்லை.

"அலகு எண்.3 இன் சில தலைப்புகள்"

•புத்தகம் கொடுக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களில் நம்பிக்கை கொண்டவர்களின் நிலை பற்றிய விவரிப்பு (111-115)

*அலகு எண்: 4

•வசனம் எண் 116 முதல் 120 வரை, கா. ஃபிர்கள், முஷ்ரிக்குகள் மற்றும் நயவஞ்சகர்கள் இதிலிருந்து இஸ்லாத்தின் எதிரிகளையும் அமைதியை விரும்பும் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்றும், எதிரியை ரகசியமாக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

"அலகு எண்.4 இன் சில தலைப்புகள்"

•கா. ஃபிர்களின் செயல்கள் சிதறிய அலைகளைப் போல வீணாகிவிடும் (116-117)

•விசுவாசிகளுக்கு எதிராக சில வகையான கா. ஃபிர்களின் பகை மற்றும் பாசாங்குத்தனம் பற்றியக் குறிப்பு (118-120)

*அலகு எண்: 5

•வசனம் 121 முதல் 129 வரை,உ. ஃஹதுப் போர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது, பின்னர் ப. ஃத்ர் போரில் முஸ்லிம்களின் ஆதரவு,ப. ஃத்ர் சம்பவம் முந்தையது என்றாலும், இது திருக்குர்ஆனில் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளது சில விளக்கவுரை அறிஞர்கள் கூறுகிறார்கள் அதில் கந்தக் போர் பற்றி உள்ளது உஹத் போர் பற்றி அல்ல,உண்மையான கூற்றின்படி பார்த்தால் அதில் உ. ஃஹத்- போர் பற்றியுள்ளது நிகழ்வு நிகழ்வின் முறைப்படி இல்லை,ஆனால் ஆலோசனையின் முறைப்படி உள்ளது.

"அலகு எண்.5 இன் சில தலைப்புகள்"

•ப. ஃத்ர் மற்றும் உ. ஃஹது போர் பற்றிய வசனங்கள் (121-129)

*அலகு எண்: 6

•வசனம் 130 முதல் 138 வரை,கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை விளக்கி, நல்ல செயல்களைச் செய்வதில் நற்பண்புகளும் பரக்கத் இருப்பதாக அறிவுறுத்தப்பட்டுள்ளது, எனவே கெட்ட செயல்களைத் தவிர்க்கவும், வட்டி பரிவர்த்தனை மற்றும் கோபத்தை கடுமையாக நிராகரிக்கவும் வலியுறுத்தப்படுகிறது ஏனென்றால் வட்டி வாங்குபவர் நரகவாதி மற்றும் கோபம் ஷைத்தானிடமிருந்து வருகிறது.

"அலகு எண்.6 இன் சில தலைப்புகள்"

•நம்பிக்கையாளர்கள் நரகத்தைத் தவிர்ப்பதற்கும் மற்றும் சொர்க்கத்தில் நுழைவதற்கான காரணங்களின் விளக்கம் (130-136)

•அநியாயக்காரர்களால் விசுவாசிகளுக்கு சோதனை மற்றும் இதில் பொறுமை கொள்வதின் வெகுமதி (137-141)

*அலகு எண் :7

•சூரா ஆல-இம்ரானின் நான்காவது அத்தியாயத்தின் வசனம் எண் 139 முதல் 148 வரை, முஸ்லிம்களுக்கு ஆறுதல் மற்றும் [உஃஹூத் போரின் பின்னணியில் தியாகிகளுக்கான நற்செய்தி அறிவிப்பு, அல்லாஹ்வால் முஸ்லிம்களுக்கு ஆறுதல் அளிக்கப்பட்டது மற்றும் உஃஹதுப் போரின் முஜாஹிதீன்களிடம் உரையாற்றப்பட்டது,நற்செயல்களில் முஸ்லிம்களின் பங்கு மற்றும் அதற்காக பாடுபடுவதின் முக்கியத்துவம் மற்றும் ஏழைகள்,ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உதவுதலின் அறிவுரை மற்றும் கருணை காட்டுவதை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

"அலகு எண்: 7 இன் சில தலைப்புகள்"

•அநியாயக்காரர்களால் விசுவாசிகளுக்கு சோதனை மற்றும் இதில் பொறுமை கொள்வதின் வெகுமதி (137-141)

•கடின உழைப்பாலும் பொறுமையாலும் சொர்க்கம் கிடைக்கிறது என்று உஃஹதுப் போரில் கலந்து கொண்டவர்களுக்கு அறிவுரை (142-143).

•நபிகள் நாயகம் அவர்கள் மனிதர் ஆவார் என்று உண்மைப்படுத்துதலும், அல்லாஹ்வின் கட்டளைப்படி அல்லாஹ்வின் தூதருக்கு மரணம் ஏற்படும் என்றும் அனைத்து மனிதர்களுக்கும் எவ்வாறு ஏற்படுகிறதோ அதைப்போல என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (144-145)

•••••••••••••••••••••••••

••லன் தனாலு••

*நான்காவது அத்தியாயம் பற்றிய சுருக்கமான அறிமுகம்.

"அத்தியாயம் எண். 4"

•அறிஞர்கள் நான்காவது அத்தியாயத்தை "15 அலகுகளாக"பிரித்துள்ளார்கள், இந்த அத்தியாயம்"லன் தனாலு" என்று அழைக்கப்படுகிறது, அதாவது "லன் தனலுலிருந்து நான்காவது அத்தியாயத்தின் தொடக்கமாகும்.

•நான்காவது அத்தியாயத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்: முதல் பகுதி சூரா ஆல-இம்ரானின் வசனங்கள் 1 முதல் 13 வரை அலகுகளைக் கொண்டுள்ளது மற்றும் அலகு எண்: 14 மற்றும் 15 இன் இரண்டாம் பகுதி சூரா அன்-நிஸாவின் தொடக்க வசனங்களைக் கொண்டுள்ளது.

*அலகுகளின் விநியோகம் பின்வருமாறு:

•அத்தியாயம் எண் 4 "லன் தனாலு"  இன் வசனங்கள் மற்றும் பாடங்களின் பிரிவுகள் அலகுகளால்!

அலகுகள்

வசனங்கள்

பாடங்கள்

•அலகு எண்: 1

92-99 மில்லத் தே இப்ராஹீமின் சிறப்புகள் மற்றும் தக்லீது செய்தல் மற்றும் சார்பு தடைசெய்யப்பட்டுள்ளது.

•அலகு எண்: 2

100-109 முந்தைய சமுதாயத்தின் தவறுகளுக்கு எதிரான எச்சரிக்கை மற்றும் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிக்கொள்ளுங்கள் என்ற அறிவுரையைக் குறிப்பீடு.

•அலகு எண்: 3

110-115 உம்மதே முஹம்மதிய்யாவிற்க்கு சிறந்த உம்மத் என்ற பெருமை வழங்கப்பட்டது.

•அலகு எண்: 4

116-120 கா.ஃபிர்,முஷ்ரிக் மற்றும் நயவஞ்சகர்களுடனான இஸ்லாமிய எதிரிகளிடம் உறவின் போது கையாண்டலின் முறை.

•அலகு எண்: 5

121-129 ப.ஃத்ர் போர் மற்றும் உ.ஃஹதுப் போர் பற்றியக் குறிப்பு.

•அலகு எண்: 6

130-138 கீழ்ப்படிதலின் முக்கியத்துவமும் மற்றும் அதன் சிறப்பும் மற்றும் பர்கத்துடைய குறிப்பு,வட்டிப் பரிவர்த்தனைகள், சொர்க்கத்தின் பண்புகள் மற்றும் சொர்க்கவாசிகளின் பண்புகள்,பாவமன்னிப்பு கோருதல் பற்றிய குறிப்பு.

•அலகு எண்: 7

139-148 முஸ்லிம்களுக்கு அனுதாபங்கள், உஹதுப் போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு நற்செய்தி,ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் பற்றிய குறிப்பு.

•அலகு எண்: 8

149-158 முஸ்லீம் ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொள்ளாமல் இருப்பதின் குறிப்பு மற்றும் தவறான ((افكارஎண்ணங்கள் ஆகியவை இந்த பிரிவில் குறிக்கப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன.

•அலகு எண்: 9

159-164 ஆலோசனை மற்றும் பரஸ்பர ஆலோசனைச் செய்வதின் முக்கியத்துவம் பற்றிய குறிப்பு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்மாதிரி பற்றிய குறிப்பு மற்றும் ஏமாற்றுபவர்களுக்கு எதிரான கடுமையான எச்சரிக்கைக் குறிப்பு.

•அலகு எண்: 10

165-179 கஸ்வத் மூலம் உண்மையான விசுவாசிகளும் நயவஞ்சகர்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளார்கள்,மேலும் இது கூறப்பட்டுள்ளது நயவஞ்சகர்கள் ஒருபோதும்

இமானின் சுவையை சுவைக்க மாட்டார்கள்.

•அலகு எண்: 11

180-189 கஞ்சத்தனத்தை விட்டு தவிர்த்து இருக்க முஸ்லிம்களுக்கு அறிவுரைக் குறிப்பு.

•அலகு எண்: 12

190-195 அல்லாஹ் தஆலாவின் அடையாளங்களைக் கவனம் செலுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, மேலும் ஒருவர் பிரார்த்தனைச் செய்தால் அவரது பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

•அலகு எண்: 13

